**கவனிக்க.-** *2010.12.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1687 - 2010 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2010.12.31

*1687 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 2206 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 2207 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 2209 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | 2246 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2010 இன் இல. 264

டீஜஆர்எப்/ஆர்ஈசீர்/252/ஏவை.

**இலங்கை தரைப்படை-நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகததர்கள் 2010.06.24 ஆந் திகதி பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் அணிகளுக்கும் சிறப்பணிகளுக்கும் உட்புகுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் களிப்புடன் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது :-

சி/ 57422 கெடெற் உத்தியோகத்தர் ஸ்ரீ நாராயண பமுனு முதியான்சேலாகே அமில சந்தருவன் பண்டார, இலங்கை சைகைச் சிறப்பணி
சி/57420 கெடெற் உத்தியோகத்தர் மீகெல் மன்வாடிகே யோஹான் விமங்க பெர்னாந்து - இயந்திர காலாட்படை அணி
சி/57413 கெடெற் உத்தியோகத்தர் தருமுர ஹெட்டி ஆரச்சிகெயி துஷார பிரியதர்ஷன - இலங்கை படைக்கலச் சிறப்பணி
சி/ 57438 கெடெற் உத்தியோகத்தர் கருணாசிங்க கெதர மாநெல் பண்டார - இலங்கை எந்திரவியல் அணி
சி/ 57520 கெடெற் உத்தியோகத்தர் தேவதா பேடிகே நிஷாந்த குணசேகர, இலங்கை பீரங்கிப்படை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010.11.29.

12-980

---

2010 இன் இல. 265

டீ/ஏஎவ்/772.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

2010, சனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை வான் படையிலிருந்து ஓய்வு பெறுகிறார் :-

ஸ்கொட்ரன் லீடர் - தொன் பிரதீப் சுஜீவ கன்னங்கர (01559) - நிர்வாக ரெஜிமேந்து

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூன் 08.

12-1140

---

டீ/ஏஎவ்/775.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து இலங்கை வான் படையிலிருந்து அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

ப்ளயிட் லெப்டினன்ட் போகொட ஆரச்சிகே தொன் சுல்பத்மேந்ரா ஜயவர்தன (02067) - விமான நிலைய அமைப்பாளர் - 2010.01.25

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, ஏப்பிறல் 12.

12-1141

---

டீ/ஏஎவ்/804.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அவரது பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து இலங்கை வான் படையிலிருந்து அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

ப்ளயிட் ஒபிசர் தொடங்கொட கமகே பிரதீப் ரொஷான் (உ/01747) - உபகரணங்கள் - 2010.05.10

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 19.

12-1142

# அரசாங்க அறிவித்தல்கள்

எமது இல. : பிஎன் 11/02/20/2010/පිටු/ஸ்.

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின்கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)**

கீழ்க்குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2011.01.03 ஆந் திகதி தொடக்கம் 2011.01.17 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகம காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்துமூலம் 2011.01.14 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம காணிப் பதிவகத்தில் 'ஜி' எனும் பிரிவில் 577 ஆம் காண்டத்தில் 197 ஆம் இலக்க ஏடு | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோறளையின் பல்லேபத்துவ தலங்கம வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹாவத்தை எனும் இடத்தினை அளவிட்டு பிரிக்கப்பட்ட 0ஏ. 0றூ.30.56பே. பரிமாணமுடைய காணித்துண்டு இலக்கம் 3 இற்கு எச். அனில் பீரிஸ் நிலஅளவீட்டாளரினால் 1996.07.21 ஆந் திகதிய 418 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் -<br><br>வடக்கே : வீதி;<br>கிழக்கே : காணித்துண்டு இலக்கம் 14 ;<br>மேற்கே : காணித்துண்டுஇலக்கம் 06;<br>தெற்கே : காணித்துண்டு இலக்கம் 07 மற்றும் 02. | 1. சி. ஏ. பி. த பொன்சேகா பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1981.10.27 ஆந் திகதிய 1464 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிமன்றத்தின் இல. 12540/L இன் வழக்கு தீர்ப்பு பிரதிக்கிளை.<br><br>3. டபிள்யூ. எச். பெரேரா பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2005.01.29 ஆந் திகதிய 8598 ஆம் இலக்க ஈட்டு உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

12-1069

---

எமது இல. : பிஎன் 11/02/22/2010/පිටු/ஸ்.

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின்கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)**

கீழ்க்குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2011.01.03 ஆந் திகதி தொடக்கம் 2011.01.17 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்துமூலம் 2011.01.24 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை காணிப் பதிவகத்தில் 'எம்' எனும் பிரிவில் 2722 ஆம் காண்டத்தில் 223ஆம் இலக்க ஏடு | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டி கோறளையின் பல்லேபத்துவ ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குள் நுகேகொடை கந்தேவத்தை வீதி என்னும் கிராமத்தில் அமைந்துள்ள தல்காவத்தை என்னும் பெயருடைய 01 ஆம் இலக்க காணித்துண்டின் மர்வின் சமரநாயக்க நிலஅளவையீட்டாளரினால் 2004.08.27 ஆந் திகதிய 9118 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் -<br>வடக்கே : இவ்வளவீட்டின் 02 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் கந்தேவத்தை வீதி ;<br>கிழக்கே : பி. பீ. எம். பெரேராவிற்கு சொந்தமான இடம் மற்றும் கந்தேவத்தை வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 107 உடைய ஆதனம் மற்றும் ஏ. ஏ. தோன எலிசபத்திற்கு சொந்தமான வரி மதிப்பீட்டு இல. 89 உடைய ஆதனம் ;<br>மேற்கே : கே. டி. சீ. சேனாரத்னவிற்கு சொந்தமான வரி மதிப்பீட்டு இலக்கம் 13515 உடைய ஆதனம்;<br>தெற்கே : டபிள்யூ. எல். எம். அபேசேகரவிற்கு சொந்தமான வரி மதிப்பீட்டு இலக்கம் 115A உடைய ஆதனம் மற்றும் லொட் 02.<br>பரிமாணம் (0ஏ. 0றூ. 21.165பே.) | 1. கல்கிஸ்சை மாவட்ட நீதிமன்றத்தின் இலக்கம் 1389/P மற்றும் 2005.10.28 ஆந் திகதிய வழக்கின் இறுதி தீர்ப்பின் பிரதிக்கினை<br>2. கல்கிஸ்சை மாவட்ட நீதிமன்றத்தின் இலக்கம் 1389/P மற்றும் 2005.10.28 ஆந் திகதிய வழக்கின் இறுதி தீர்ப்பின் பிரதிக்கினை |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

12-1070

---

## 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம்

34(8) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டமூலத்தின் 34(8) (அ) பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ''கறந்தெனிய கிரிபேத்த ஸ்ரீ விஜயசுந்தராராம விகாரையின் பிக்குமார் விடுதிக் கட்டிட நிர்மாணத்துக்கான நிதியம்'' நிறுவனத்தை அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2010, திசெம்பர்.

**அட்டவணை**

''கறந்தெனிய கிரிபேத்த ஸ்ரீ விஜயசுந்தராராம விகாரையின் பிக்குமார் விடுதிக் கட்டிட நிர்மாணத்துக்கான நிதியம்'

12-1060

# வரவுசெலவுத் திரட்டுக்கள்

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

*நிதிக் கூற்றுக்களுக்குக் குறிப்புகள்*

***முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்:***

*1. **பொது கொள்கைகள்***

*1.1 இலங்கை திறந்த பல்கலைக்கழக நிதிக் கூற்றுகளை வரலாற்று ரீதியான கிரய மரபு மற்றும் அட்டுறு அடிப்படையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கு இசைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*1.2 ஆங்கிலப் பட்டப்பின் கல்வி நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட பயன்பாடுகளுக்கான கிரயம் மற்றும் பொது வசதிகளுக்கான செலவுகள் அந்நிறுவகத்திடமிருந்து வருமதியாகக் கணக்கில் காட்டப்படவில்லை.*

*1.3 ஆலோசனை வேலைத் திட்டங்களின் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான வித்தியாசம், கல்விசார் துறைகள், பல்கலைக்கழக அச்சகம் மற்றும் தொடர்பாடல் நிலையம் ஆகியவற்றினால் ஆலோசனை மற்றும் வெளிநிலை வள நிலையத்தின் கீழ் நடாத்தப்பட்டதும் பாரமெடுத்ததுமான அநேக ஒப்படைகள் மற்றைய மூலங்களால் பெற்ற வருமானமாக கணக்கீட்டு செய்யப்பட்டது. அத்தகைய மீதியின் ஒரு பகுதி 380 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொருத்தமான அபிவிருத்தி நிதியங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

*1.4 முறிகளையும் உடன்படிக்கைகளையும் மீறுதல் மீது ரூ. 36,271,370.31 தொகை வரவேண்டியுள்ளது.*

*1.5 **ஒப்பீட்டுத் தகவல்:***

*ஒப்பீட்டுக்கு வசதியளிக்குமுகமாகத் தொடர்புள்ள முன்னைய ஆண்டு மீதிகள் நடப்பாண்டு வகுப்பப்படுத்தலுக்கும் சமர்ப்பிப்பும் ஏற்றாற்போல் மீள்வகுப்புப்படுத்தப்பட்டன.*

*1.6 தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெற்றவைகளில் செலவழிக்காத தொகைகள் நடப்பும் பொறுப்புகளாக கணக்கீடு செய்யப்பட்டது. ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்காக அரச மானியத்திலிருந்து வழங்கப்பட்ட ஒதுக்கீடு ஆராய்ச்சிச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டது.*

*1.7 திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் முதற்கண் செலவிடப்படாத மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு, பின்னர் செலவிடப்பட்ட மூலதன மானியத்திற்கும் வருமானக் கணக்குகளுக்கு புனருத்தாபனமும் பராமரிப்புமான அரச மானியம் எனவும் இடமாற்றம் செய்யப்பட்டன.*

*1.8 **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்:***

(i) *ஆதனங்களின் பெறுமதியைக் கணித்தல்:*

*1981 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் நிலையான ஆதனங்கள் முதன் முறையாக உத்தரவுபெற்ற பெறுமதிப்பீட்டாளாளரையும் ஒரு பட்டயக் கணக்காளரையும் உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழுவினால் தொடர்புள்ள கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் புதிதாக தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் நடப்புப் பெறுமதியோடு அவசியமான செம்மையாக்கத்துடன் எழுதப்பட்டன. அதன் விளைவாக பல்கலைக்கழக கணக்குகளில் நிலையான சொத்துக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க ஓர் அதிகரிப்பு உள்ளது. அவ்வருடத்தில் கொள்வனவு செய்த எல்லாச் சொத்துக்களும் எதிர்பாரா செலவுகளோடு கொள்வனவுக் கிரயத்தில் பதிவு செய்யப்பட்டன.*

*2009. 12.31 க்கு முன்னர் கொள்வனவு செய்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் பதிவுசெய்யப்பட்டன.*

(ii) *பல்வேறு வேலைத்திட்ட நிதியங்களுள் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வேலைத்திட்ட நிதியங்கள் கணக்கிலிருந்து "வெளி மானியத்திலிருந்து மூலதனச் செலவுக்குப் பங்களிப்பு"க்கு இடமாற்றம் செய்யப்பட்டது.*

(iii) *நன்கொடைகளாகக் கிடைக்கப்பெற்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டு, இ. க. நி. 24 இன்படி (குறிப்பு 13) அச்சொத்துக்களின் தேய்மானங்கள் அவற்றின் பயன்தரு ஆயுட்காலப் பகுதியில் வருமானமாக பதிவழிக்கப்பட்டன.*

(iv) குத்தகைக்கு எடுக்கப்பட்ட ரூ. 3,112,240.00 பெறுமதி கொண்ட மோட்டார் கார் மோட்டார் வாகனங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(v) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானம் நீங்கிய கிரயத்தில்/மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. தேய்மானம் 1995.10.05 ஆந் திகதிய 649 ஆம் இலக்க ப. மா. ஆ. சுற்றறிக்கையின்படி நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு பின்வரும் வீதங்களில் அறவிடப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 05% |
| தளபாடம் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| நூலக நூல்கள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| ஆய்வுக்கூட கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| பட்டதாரி உடுப்புகள் | 20% |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 20% |

தேய்மானம் கொள்வனவுத் திகதியிலிருந்து அறவிடப்பட்டது.

தேய்மானம் நிலையான சொத்துக்களின் மீள்கணிக்கப்பட்ட பெறுமதியில் அறவிடப்படும். மீள்மதிப்பீட்டின்போது நிலையான சொத்துக்களின் பெறுமதியில் உயர்வு ஏற்படுவதன் விளைவாக இச்சொத்துக்களின் அதிகரித்த பெறுதிமதிக்கு அறவிடப்படும் தேய்மானம் கணக்கீட்டில் குறிப்பிடத்தக்கதோர் அதிகரிப்பைக் காட்டுகிறது.

**1.9 பணிக்கொடைக்கான ஏற்பாடு**

இச்சேவையில் 5 வருடங்களை நிறைவுசெய்த எல்லா ஊழியர்களுக்கும் இளைப்பாறுதல் பணிக்கொடை செலுத்தப்பட கணக்கீட்டின் முழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேற்பாட்டுக்கு நிதியம் வெளியிலிருந்து வருவதில்லை.

**2. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்:**

2.1 நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் பொறுப்புகள் அனைத்தும் கணக்கிடப்பட்டன.

2.2 நீதிமன்றத்தில் அல்லது தொழில் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படாதிருக்கும் வழக்குகளில் நிச்சயமாய் கூற இயலாதிருக்கும் பொறுப்புகளும் சொத்துக்களும் தரப்படவில்லை.

**3. வருமானமும் செலவினமும்:**

**3.1 வருமானம் இனங்காணல்:**

வரூமனம் அரச மானியம் ப.மா.ஆ மானியங்கள், பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் உள்நிலை மூலங்கள் ஊடாக ஈட்டிய வருவாய் என்பவற்றைக் கொண்டது. முதலீட்டின் மீதான வட்டி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரச மானியம் கிடைத்ததன் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது. மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பாட நெறிக் கட்டணங்கள் பதிவு செய்கையில் வருமானமாக இனங்காணப்பட்டது.

**3.2 செலவினம் இனங்காணல்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் பிரகாரமும் பொது மாதிரி அறிக்கையிடும் முறையையும் ஆதாரமாகக் கொண்டு பல்வேறு செலவின தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு செலவினங்கள் வேலைத்திட்டங்களாலும்/இலக்குகளாலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**3.3 தொலைக்கல்வி நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம்:**

ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதி வழங்கப்பட்ட "தொலைக்கல்வி நவீனமயப்படுத்தல் வேலதைத்திட்டம்' கட்டிடங்கள் நிர்மாணம், ஆதனம் மற்றும் பொறி அபிவிருத்தி, உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு கற்பித்தலுக்கான மூலவளங்கள் அபிவிருத்தி ஆகியனவற்றிற்கு பல்கலைக்கழகத்திற்கு வருடம் பூராவும் நிதி உதவி வழங்கியது.

**அபிப்பிராயம்**

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2009, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2009, திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிலவரத்தினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

2009.12.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| 2008.12.31 ரூபா ச. | | ரூபா ச. | 2009.12.31 ரூபா ச. |
|---|---|---|---|
| | **சொத்துக்கள்:** | | |
| | ***நடைமுறையல்லா சொத்துக்கள்*** | | |
| 48,55,22,771 | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 8,20,17,03,075.19 | |
| - | நடைபெறும் மூலதன வேலை | 4,91,26,816.11 | |
| 7,56,60,836 | முதலீடுகள் | 9,63,22,652.87 | |
| 56,11,83,606 | | | 8,34,71,52,544.17 |
| | ***நடைமுறைச் சொத்துக்கள்*** | | |
| 4,97,20,291 | சரக்கிருப்பு | 5,04,05,960.65 | |
| 50,31,072 | வருமதிகள் | 4,62,69,431.93 | |
| 3,14,49,660 | ஊழியர்களுக்கு கடன்களும் முற்பணங்களும் | 3,64,86,993.79 | |
| 1,24,48,041 | முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | 87,84,406.30 | |
| | வழியிலுள்ள பணம் | - | |
| 6,27,29,860 | வங்கியிலுள்ள காசு | 2,58,10,342.10 | |
| 96,431 | கையிலுள்ள காசு | 71,468.76 | 16,78,28,603.53 |
| 16,14,75,355 | | | |
| 72,26,58,962 | **மொத்தச் சொத்துக்கள்** | | 8,51,49,81,147.70 |
| | **உரிமையாண்மையும் பொறுப்புகளும் :** | | |
| | ***மூலதனமும் ஒதுக்கங்களும்*** | | |
| | *மூலதனம்:* | | |
| 1,06,85,57,731 | செலவளித்த மூலதன மானியம் | 1,11,71,95,568.09 | |
| (14,71,278) | செலவளிக்காத மூலதன மானியம் | (91,09,115.07) | |
| 57,72,855 | த. தொ. அபிவிருத்திக்கான ப.மா.ஆ. மானியம் | 57,72,854.50 | |
| 97,63,364 | வெளி மானியத்திலிருந்து மூலதன செலவுக்கு பங்களிப்பு | 1,14,89,276.48 | |
| 66,86,86,093 | வெளிநாட்டு உதவி - தொடர்பாடல் நிலையம் | 66,86,86,092.68 | |
| 2,74,89,852 | நன்கொடைகள் | 2,04,22,159.59 | |
| 1,77,87,98,617 | | | 1,81,44,56,836.27 |
| | **ஒதுக்கங்கள்** | | |
| | பொது ஒதுக்கம் | | |
| (1,22,00,52,628) | பொது ஒதுக்கம் | (1,57,94,20,577.72) | |
| (18,62,77,262) | திரண்ட பெறுமானத் தேய்வு | (18,62,77,262.00) | |
| (1,40,63,29,890) | | | (1,76,56,97,839.72) |
| | மீள்மதிப்பீடு மிகை | | 80,80,90,38,972.76 |
| | **பொறுப்புக்கள்** | | |
| | ***நடைமுறையல்லா பொறுப்புக்கள்*** | | |
| 83,87,216 | சர்க் நிதியம் | 86,47,741.64 | |
| 9,16,50,308 | குறித்த நிதியங்கள் (மட்டுப்படுத்தப்பட்ட) | 10,60,61,750.27 | |
| 16,56,89,468 | பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17,92,30,355.00 | |
| 6,65,273 | குத்தகை கடன்கொடுநர் | 4,49,561.72 | |
| 26,63,92,264 | | | 29,43,89,408.63 |
| 63,88,60,991 | | | 8,42,31,87,377.94 |

| 2006.12.31 ரூபா ச. | | 2009.12.31 ரூபா ச. | ரூபா ச. |
|---|---|---|---|
| | **நடைமுறைப் பொறுப்புகள்** | | |
| 5,35,55,607 | மீளளிப்பு வைப்பு | 6,01,33,211.72 | |
| 57,39,693 | சென்மதிகள் | 42,91,647.89 | |
| 6,29,698 | வாடிக்கையாளர்களிடமிருந்து முற்பணம் - பல்கலைக்கழக அச்சகம் | 5,65,905.91 | |
| 2,38,72,973 | அட்டுறு செலவினம் | 2,68,03,004.24 | |
| 8,37,97,971 | | | 9,17,93,769.76 |
| 72,26,58,962 | | | 8,51,49,81,147.70 |

| ..................................... | ................................. | .............................. |
|---|---|---|
| பேரா. யூ. விதானபதிரன, கணக்கீட்டு அலுவலர், உபவேந்தர். | டபிள்யூ. எம். கருணாரத்ன, உதவி கணக்கீட்டு அலுவலர், பதிவாளர். | கே. எம். பிரேமரத்ன, நிதியாளர். |

திகதி 20.04.2010

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

*2009.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு*

| 2008.12.31 (ரூபா) | **வருமானம்:** | 2009 ரூ. ச. |
|---|---|---|
| 47,98,00,000 | மீண்டெழும் செலவினத்திற்கான அரச மானியம் | 50,50,00,000.00 |
| 1,21,59,498 | புனரமைப்புக்கும் பராமரிப்புக்கும் அரசாங்க மானியம் | - |
| 45,84,599 | முதலீட்டிலிருந்து வட்டி | 60,41,247.47 |
| 10,88,662 | கடன்களிலிருந்தும் முற்பணங்களிருந்தும் வட்டி | 13,12,508.25 |
| 3,69,298 | ஆதனங்களிலிருந்து வாடகை | 22,04,622.50 |
| 90,434 | பழைய களஞ்சிய விற்பனை | 7,14,846.00 |
| 3,892 | பண்ட விற்பனை | 1,636.00 |
| 45,44,127 | நானாவித வருமானம் (குறிப்பு 19) | 42,65,713.53 |
| 46,39,070 | பதிவுக் கட்டணங்கள் | 53,38,130.00 |
| 17,34,60,528 | போதனாக் கட்டணங்கள் (குறிப்பு 20) | 19,51,64,272.10 |
| 6,89,150 | பரீட்சைக் கட்டணங்கள்/சான்றிதழ் கட்டணங்கள் | 92,400.00 |
| 4,39,030 | வெளியீடுகள் விற்பனை | 5,45,700.00 |
| 1,73,74,355 | விண்ணப்பப் படிவங்கள் விற்பனை | 1,45,83,820.00 |
| 3,91,040 | நூலக தண்டப் பணங்கள் | 4,69,007.50 |
| 1,10,768 | வாகனங்களிலிருந்து வாடகை | 66,781.01 |
| 7,34,450 | விடுதிக் கட்டணங்கள் | 7,37,715.00 |
| 34,47,290 | குறைநிரப்புக் கட்டணம் | 46,01,765.00 |
| 9,94,663 | பிற மூலங்களிலிருந்து வருமானம் | 4,81,533.53 |
| 1,26,22,253 | நன்கொடைகள் பதிவழிப்பு | 1,02,14,421.11 |
| 71,75,43,106 | | 75,18,36,119.00 |
| | **செலவினம் :** | |
| 11,70,67,176 | பொது நிர்வாகமும் ஊழியர் சேவைகளும் | 12,85,02,994.06 |
| 6,94,75,198 | பெறுமானத் தேய்வு | 31,70,66,611.26 |
| 46,20,05,668 | கல்விசார் சேவைகள் | 53,25,03,119.93 |
| 390,31,270 | கற்பித்தலுக்கான மூலவளங்கள் | 5,15,08,424.95 |
| 19,27,443 | சுகாதார சேவைகள் | 20,70,088.18 |
| 1,74,52,936 | காணி, கட்டிட பராமரிப்பு | 2,04,22,440.40 |
| 3,87,23,755 | துணை செயற்பாடுகள் | 3,55,31,694.31 |
| 74,56,83,446 | மொத்தம் | 1,08,76,05,373.09 |
| (2,81,40,340) | வருமானத்திலும் கூடிய செலவினம் | (33,57,69,254.90) |

| 2008.12.31 (ரூபா) | | 2009 ரூ ச. |
|---|---|---|
| | **முந்திய ஆண்டிற்கான சீராக்கங்கள்** | |
| (29,69,678) | பணிக்கொடைக்கான ஏற்பாடு | - |
| 6,31,993 | ஏனைய முந்திய ஆண்டிற்கான சீராக்கங்கள் | (2,35,98,695.99) |
| (23,37,685) | | (2,35,98,695.99) |
| (1,18,95,74,603) | முந்திய ஆண்டிலிருந்து கீ/வ மீதி | (1,22,00,52,627.64) |
| (1,22,00,52,628) | | (157,94,20,577.72) |

பேரா. யூ. விதானபதிரன,
கணக்கீட்டு அலுவலர்,
உபவேந்தர்.

டபிள்யூ. எம். கருணாரத்ன,
உதவி கணக்கீட்டு அலுவலர்,
பதிவாளர்.

கே. எம். பிரேமரத்ன,
நிதியாளர்.

திகதி 20.04.2010

12-933

---

உபவேந்தர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளை பின்தொடர்ந்து எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ் அறிக்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2007, ஓகத்து 24 ஆந் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 கணக்காய்வின் நோக்கெல்லை:**

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் யாவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதிய அளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தவையாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் மற்றைய வளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய எவ்வளவிற்கு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவிற்கு விரிவுபடுத்திக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் குறிப்பிடக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயமாக உத்தரவாதப்படுத்துவதற்கு இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கும் வழிமுறைகளுக்கும் வழமைகளுக்கும் அமைவாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.கணக்காய்வானது நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்துகைகளையும் ஆதாரப்படுத்தும் சான்றுகளைப் பரிசோதனை செய்வதுடன் கணக்கீட்டுத் தத்துவங்களை மதிப்பீடு செய்தல், நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் செய்யப்படும் குறிப்பிடத்தக்க மதிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும் அவற்றின் வெளிப்படுத்தல்கள் யாவற்றையும் மதிப்பாய்வு செய்வதுடன் கடைப்பிடிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் முறையானதாக, மாற்றமின்றி பிரயோகிக்கப்பட்டு போதுமானளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பவற்றை தீர்மானிப்பதையும் உள்ளடக்கியதாகவுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் எனது அறிக்கையில் 2:2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர எனது பரிசோதனையிலிருந்தும் எனது சிறந்த தகவல்களின் அடிப்படையிலும் எனக்குத் தரப்பட்ட விளக்கத்தின் அடிப்படையிலும் நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு அமைவாகவும் நிதிக்கூற்றுடன் தரப்பட்டுள்ள குறிப்புகளில் (இல.: 1-10) குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைவாகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனுடைய செயற்பாடுகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதென்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் :**

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்:

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்வேறு நிறுவனங்கள் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்கள் புத்தகங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 51,37,292 கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 36,45,875 பௌதீக மெய்மையாய்வின் மீதிக்குப் பதிலாக புத்தகப் பெறுமதியிலேயே கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(இ) அம்புலன்ஸ் ஒன்றின் பெறுமதி ரூபா 38,00,000 கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 9 தொலைபேசி இணைப்புக்கள் பொருத்தப்பட்டதற்கான செலவு பெறுமதி ரூபா 1,65,000 மூலதன செலவாக காட்டப்படாது தொடர்பாடல் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(உ) கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யபட்டிருந்த 8 கணணிகள் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்களின் கொடுப்பனவு பெறுமதி ரூபா 709,700 மூலதனச் செலவாக மீளாய்வாண்டின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) வங்கிக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட நேரடிச் செலவுகள் மற்றும் வரவுகள் தொகை முறையே ரூபா 8,133,258 மற்றும் ரூபா 20,751 சம்பந்தமாக புலன் விசாரணை செய்யப்படவோ கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டோ இருக்கவில்லை.

(எ) 6 மாத காலத்திற்கு மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 74,642 பெறுமதியான 21 காசோலைகள் சமபந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 பெறப்பட வேண்டிய, செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்:

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன:-

(அ) பல்லைக்கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 18,538,512 சம்பந்தப்பட்ட தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 533,079 ஒரு வருடத்திற்கு மேலாக பல்கலைகழகத்தின் பதவியணியினரால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. நிபந்தனைகளுடனான ஒப்பந்தத்தின் படி பல்கலைக்கழகம் அவற்றை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோர் மீதிகளின் காலப் பகுப்பாய்வு கூட்டுத்தொகை ரூபா 35,593,121 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை:

செலவுகளுடன் தொடர்பான கோவைகள், பற்றுச்சீட்டுக்கள், பெறுவனவுச் சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்று இன்மையால் கணக்குகளில் 5 பொருட்களின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 31,519,521 தொகையான செலவினத்தை திருப்திகரமாக கணக்காய்வில் சான்றுப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாதுள்ளது.

2.2.4 சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாமை :

கீழ்வரும் சட்டங்களின் பல ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் அறிவுறுத்துரைகள் என்பவற்றுடன் இணங்கி இருக்காததுடன் இவ்விணங்காமை பல்கலைக்கழக உப வேந்தருக்கு காலத்திற்கு காலம் சுட்டி காட்டப்பட்டிருந்தது:-

(அ) பல்கலைக்கழகச் சட்டத்தின் 16 இன் 1987 இன் பிரிவு 110.

(ஆ) நிதியியல் சட்டம் இல. 38 இன் 1971 இன் பிரிவு 14 (1).

(இ) நிதிப் பிரமாணங்கள் இல. 110, 396(டி), 700(5), 702(3).

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவைகள்

(i) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1
(ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 9

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்

(i) 13 நவெம்பர் 1997 இன் இல. 48
(ii) 25 பெப்புருவரி 1980 இன் இல. 63 பிரிவு 6 (3)
(iii) 02 ஓகத்து 2002 இன் இல. 807

2.2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்:

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன:-

(அ) 1994, யூன் மாதத்தின் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி பின்வரும் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| விடயம் | தொகை | |
|---|---|---|
| | 2005 ஆம் ஆண்டு வரைக்கும் ரூபா | 2006 ஆம் ஆண்டுக்கான ரூபா |
| (i) ஊக்குவிப்பு படிகள் மற்றும் இரண்டாம் மூன்றாம் மொழிகளின் தேர்ச்சிக்கான சம்பள ஏற்றங்கள் | 2,045,728 | 262,327 |
| (ii) செய்து முடியாத வேலைகளை செய்து முடிப்பதற்கான படிகளின் கொடுப்பனவுகள் மற்றும் கற்கைப்படிகள் என்பனவற்றைக் கருத்தில் எடுத்துச் செய்யப்பட்ட மேலதிகக் கொடுப்பனவான பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,609,654 | 1,494,037 |

இக்கொடுப்பனவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் மூலம் செய்யப்பட்டதாக உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு அலுவலர்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்காக ரூபா 101,750 வெகுமானக் கொடுப்பனவாக செய்யப்பட்டிருந்தது. எனினும் மேலதிக கொடுப்பனவிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு:

### 3.1 நிதிசார் செயலாற்றல்:

3.1.1 நிதிசார் விளைவுகள்:

வெளிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, பல்கலைக்கழகத்தின் செயற்பாடு 2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பற்றாக்குறையாக ரூபா 259,906,871 விளைந்திருந்ததுடன் கணக்கிற்குள் எடுக்க முன்மீண்டுவரும் செலவிற்கான அரசாங்க மானியத்தை முன்னைய வருடத்துடன் தொடர்புடைய பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது ரூபா 190,571,44 உள்ளது. கணக்கிற்குள் எடுத்த பின் மீண்டுவரும் செலவிற்கான அரசாங்க மானியமான ரூபா 203,540,590, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 56,366,281 குறைக்கப்பட்டு இருந்தது மற்றும் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிற்காக பெறப்பட்ட அரசாங்க மானியம் ரூபா 163,537,502 குறைவான பற்றாக்குறை முன்னைய ஆண்டில் ரூபா 27,033,942 ஆக குறைக்கப்பட்டு இருந்தது.

3.1.2 ஆராய்ச்சி மானியங்களின் பயன்பாடு:

ஆராய்ச்சி மானியங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பரீட்சார்த்த கணக்காய்வு செவ்வை பார்த்தலில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:-

(அ) ஒவ்வொரு ஆராய்ச்சி மானிய செயயற்திட்டத்திற்கும் அவை தொடர்பாக கோவைகள் பேணப்பட்டிருந்தன. ஆனால் அதிகளவான ஒப்பந்த படிவங்கள் உபவேந்தரால்/பதிவாளரால் ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை, என்பதுடன் மற்றும் சில விண்ணப்பங்கள் ஆராய்ச்சி மானியக் குழு செயலாளரால் ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி குழுவினால் அனுமதிக்கப்பட்ட காலத்தில் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாது கால அவகாசம் பெறுவது வழக்கமான முறையாக இருந்தது. பூரணப்படுத்தப்படாத ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 176,170 செலுத்தப்பட்ட அதேவேளை உரிய திகதியிலும் நான்கு வருட காலத்திற்கு மேலாக செயற்திட்டங்கள் காலதாமதமடைந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. இது சம்பந்தமாக அனைத்து மானியங்களும் தீர்க்கப்பட்டிருப்பதாக உபவேந்தர் தெரிவித்திருந்தார்.

(இ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு குழுவினால் 06 யூலை 2006 இல் நடாத்தப்பட்ட கூட்டத்தின் (ஆர்பிசி.இல. 11/2006) படி இறுதி நீடிப்பு 27 ஒகத்து 2006 வரை நிலுவையாக உள்ள ஆராய்ச்சி மானிய முற்பணம் தீர்க்கப்பபிவதற்கு தீர்மானம் அடுக்கப்பட்துடன் நிலுவை முற்பணம் தீர்க்க தவறும் பட்சத்தில் 25 செத்தெம்பர் 2006, இருந்து ஆராய்ச்சி மானியத்தினைப் பெற்ற சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் ஆராய்ச்சி மானியத்தை அவர்களின் முழு சம்பளத்திற்கு சமமான தவணைகளில் முழுவதையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இருந்தும் இத்தீர்மானம் 2007, மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்வு பரீட்சிப்பு வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1.3 *சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்*

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டிருந்தன:-

(i) கணனிக்கான சராசரி செலவு ரூபா 49,000 இல் 17 கணனிகளை தரமுயர்த்துதல் மொத்தச் செலவு ரூபா 836,100 ஏற்பட்டிருந்தது. எப்படியிருந்தும் புதிய கணனிகள் இத்தொகைக்குள் கொள்வனவு செய்திருக்கலாம் என தோன்றுகின்றது. மேலும் இச்செலவானது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சட்டமாதிபர் திணைக்களத்திற்கு வழக்குகளை ஒப்படைப்பதற்குப் பதிலாக மூன்றாம் நபருக்கு எதிராக நிறுவன சட்ட நடவடிக்கைக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூபா 265,783 செலவு செய்யப்பட்டுள்ளது.

3.1.4 *தகுதியற்ற நிதிப்பயன்பாடு*

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டிருந்தன:-

(அ) ஒரு காசோலை ரூபா 7,500,000 கட்டிடத் திணைக்களத்திற்கு சார்பாக வரையப்பட்டுள்ளது மற்றும் மீளாய்வாண்டின் கீழான காலத்தில் 09 மாத தாமதத்தில் கட்டிடத் திணைக்களத்திற்கு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இருந்தும் பிற்பாடாக காசோலை திணைக்களத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் மூலதனச் செலவீனமான இவ் நிதி மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாது தொடர்ந்திருந்தது. மேலும் இத்தொகை மூலதன நிதிக் கணக்கிலிருந்து மீண்டுவரும் நிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. இது சம்பந்தமான இவ்வேலை ஏனைய ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருப்பதாக உபவேந்தர் தெரிவித்தார்.

(ஆ) ஒரு தொகை ரூபா 6,02,803 கட்டிடம் கட்டுவதற்காக ஐஆர்கீயூ (IRQUE) நிதியத்திற்கு பதிலாக பல்கலைக்கழக நிதியில் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடம் ஐஆர்கீயூ (IRQUE) செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என உத்தேசிக்கப்பட்டது.

3.1.5 *சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் :-*

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டிருந்தன :-

(அ) புதினப் பத்திரிகையில் ஞாபக செய்தி வெளியீட்டுக்கான செலவுத் தொகை ரூபா 70,010 இடம்பெற்றிருந்தது.

(ஆ) உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான பொருட்களை சேகரிப்பதற்கான போக்குவரத்துச் செலவு ரூபா 103,950 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது பல்கலைக்கழக நோக்கத்திற்குள் உட்படாததாகும்.

**3.2 *ஒரு மாணவருக்கான செலவு :***

பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட 04 பாடநெறிகளுக்குமான மொத்தமாக 1,370 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டு காலத்தில் மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 262,710,563 ஏற்பட்டதுடன் ஒரு மாணவருக்கான செலவு ரூபா 191,760 ஆக இருந்தது.

**3.3 *நடாத்தப்பட்ட பரீட்சைகள்:***

மீளாய்வாண்டின் கீழான காலத்தில் நடைபெற்ற பரீட்சைகளின் விபரங்கள் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை என்பன கீழே தரப்படுகின்றன:-

| பீடம் | காலம் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இஸ்லாமிய மதக் கற்கைகள் மற்றும் அரபிக் மொழி | அரையாண்டு 1 | 52 | 49 |
| கலை மற்றும் கலாச்சாரம் | அரையாண்டு II | 728 | 616 |
| முகாமைத்துவம் | அரையாண்டு II | 275 | 209 |
| வணிகம் | அரையாண்டு II | 134 | 93 |
| பிரயோக விஞ்ஞானம் | அரையாண்டு II | 234 | 134 |

*3.4* ***நூலக நிர்வாகம் :***

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டிருந்தன:-

(அ) குறிப்பிட்ட காலத்திற்குள் விரிவுரையாளர்கள் ஆகக் கூடிய எவ்வளவு புத்தகங்களை இரவல் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நூலக குழுவினால் தீர்மானிக்கப்படவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 68 உத்தியோகத்தர்கள் ரூபா 207,312 பெறுமதியான 266 புத்தகங்களை இரவலாக பெற்று 04 வருடங்களுக்கு மேல் மீள பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்காது உள்ளனர். இவை தொடர்பாக பெரும் பகுதியானவை அறவிடப்பட்டுள்ளதாக உப வேந்தர் தெரிவித்துள்ளார்.

(இ) சில விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில் மூலம் வெளியூர் சென்று மீளத்திரும்பாதவர்கள் இரவல் புத்தகங்களை மீளச் செலுத்தாது இருப்பதால் விளைவுகள் ஏனையோர் பாவிப்பதற்கு புத்தகங்கள் இல்லை. இவை தொடர்பாக பெரும் பகுதியானவை, பின்னர் அறவிடப்பட்டுள்ளதாக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

*3.5* ***மெய்மையாய்வுச் சொத்துக்கள் :***

2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கு முறையாக சொத்துக்கள் பௌதிக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2004 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கை கணிப்பீட்டு சபை உறுப்பினர்களால் சான்றுறுதி செய்யப்படவில்லை.

*3.6* ***பாதீட்டுக் கட்டுப்பாடு :***

பாரிய வேறுபாடுகள் பாதீட்டு செலவீனம் மற்றும் காட்டப்பட்ட உண்மைச் செலவீனம் இடையே அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு முகாமைத்துவ கட்டுப்பாட்டுக்கு வினைத்திறன் உள்ள கருவியின் பயன்பாடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் :**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் 2007, ஓகத்து 24 இல் வழங்கப்பட்ட விரிவான எனது அறிக்கையொன்றில் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சம்பந்தமாக விசேட கவனம் தேவைப்படுகின்றது:-

(அ) தினவரவு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) பொருள் இருப்பு பதிவேட்டுப் பாவனை
(ஈ) கடன்பட்டோர்
(உ) கணக்கீடு

(கையொப்பம்) பி. ஏ. பேமதிகல,
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

17.10.2007

எமது இல. : எப்ஏ/வீசீ/பீ/ஏஜீ/2006
உமது இல. : என்ஈ/ஏஎம்/பீ/எஸ்ஈயுஎஸ்எல்/2006

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,
கொழும்பு.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 108(2) இற்கு அமைவாகவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைவாகவும் 2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

மேற்படி விடயம் சார்பாக 05, செத்தெம்பர் 2007 ஆந் திகதியிடப்பட்ட தங்களின் கடிதம் தொடர்பாக தங்களது நகல்அறிக்கையில் வினவப்பட்டுள்ள வினாக்கள் தொடர்பான எமது அவதானிப்புகள் கீழே கொடுக்கப்படுகின்றன:-

**2. கணக்குகள்:**

*2.3* ***கணக்குகள் மீதான கருத்துரைகள் :***

2.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள் :

(அ) குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது நிவர்த்தி செய்யப்படும்.

(இ) பஸ் வண்டி IRQUE திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதாகும். தவறுதலாக இது 2006, கணக்குகளில் 32 ஆம் பக்கம் உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இது நிவர்த்தி செய்யப்படும். அம்புலன்ஸ் வண்டியின் பெறுமதி தற்போது கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஈ) குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது நிவர்த்தி செய்யப்படும்.

(உ) இது நிவர்த்தி செய்யப்படும்.

(ஊ) ரூபா 74,49,333.33 தொகையான நேரடிப் பற்றுக்கள் கணக்கிணக்கம் செய்யப்பட்டு தற்போது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இன்றைய நிலையில் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டிய மீதியானது ரூபா 6,83,924.67 ஆகும். வங்கியிலிருந்து பற்றுக் குறிப்பு கிடைக்கப்பெற்றதும் இம்மீதி கணக்கிணக்கம் செய்யப்படும்.

(எ) இது சில நானாவித கொடுப்பனவுகளைக் குறிக்கின்றது. இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3.2 பெறவேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள் :

(அ) சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உறுதிப்படுத்தல்களுக்கான வேண்டுகோள்களை நாம் அனுப்பியுள்ள போதிலும், எதுவித பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) அறவிடப்பட முடியாமல் காணப்படும் கடன் நிலுவைகளானவை பதவியை இராஜினாமா செய்த, பதவியை வெற்றிடமாக்கிய அல்லது இறந்து போன ஊழியர்களுக்கு உரியவையாகும். இதுவரை ஓர் ஊழியரின் சேமலாப நிதியத்திலிருந்து ரூபா 24,650 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவைத் தொகைகளையும் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) எதிர்கால பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2.3.3 கணக்காய்விற்கு சான்றின்மை:

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 31,519,521 வினுள் -

(அ) ரூபா 26,861,794 தொகையானது இவ் ஆண்டின்போது ஏற்பட்ட மூலதனச் செலவீடுகள் தொடர்பானவையாகும். இவை தொடர்பான அனைத்து கோவைகளும் தேவையான சீராக்கங்களும் கணக்காய்வாளர்களால் வேண்டப்பட்ட பிரகாரம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ரூபா 2,284,855 தொகையானது வீட்டு வாடகை மற்றும் வாகன வாடகைக்காக ஏற்பட்ட செலவீடுகளாகும். போதிய விடுதி வசதியின்மை காரணமாக, மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக பல்கலைக்கழகமானது வீடுகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ள நிர்ப்பந்தத்தில் உள்ளது. வீட்டு உரிமையாளர்களுடன் நாம் உடன்படிக்கைகளைச் கைச்சாத்திட்டுள்ளதுடன் கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர்களுக்கு அவர்களின் அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

(இ) பல்கலைக்கழக மருத்துவ அலுவலருக்கான வெற்றிடத்தை நிரப்ப பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் இதுவரை பயனளிக்கவில்லை. இப்பதவி வெற்றிடத்திற்கான எமது விளம்பரங்களுக்கு தகுந்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையே இதற்குக் காரணமாகும். இவ்வாறான சூழ்நிலைகளின் கீழ் எமக்கு உதவுவதற்காக எமக்கு அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளின் உதவியினை நாம் நாடியுள்ளோம்.

(ஈ) ரூபா 1,254,711 தொகையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன தொடர்பானதாகும். இக்கொடுப்பனவுகளுக்கான உறுதிப்படுத்தல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சபை என்பவற்றினால் காலத்துக்குக் காலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. அனேகமான உறுதிப்படுத்தல்கள் இப்போது கிடைக்கப்பெற்று விட்டன.

2.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களோடு இணங்காமை

எஸ்எல்ஏஎஸ் 18 - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம்

பிரிவு 109 - 2005 ஆம் ஆண்டு வரையிலான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் அரசாங்க அச்சகரிடம் ஏற்கனவே கையளிக்கப் பட்டு விட்டன.

பிரிவு 110 - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தாபனக் கோவை

பிரிவு 3:1 - அத்தியாயம் XXVII - கல்விசார் ஆளணியினரின் வரவுப் பதிவேடுகள் கல்விசார் துறைத் தலைவர்களினால் பேணப்பட்டு வருகின்றன.

பிரிவு 9 - அத்தியாயம் XXVII - வாகன லொக் புத்தகங்கள் தற்போது பேணப்பட்டு வருகின்றன.

பமாஆ சுற்றறிக்கைகள் :

இலக்கம் 63, இன் பிரிவு 6(3) - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

1997, நவெம்பர் 13 ஆம் திகதிய 48 ஆம் இலக்கம் - நிலைய சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதியியல் பிரமாணங்கள்

இலக்கம் 110 - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது

இலக்கம் 396(ட) - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது

இலக்கம் 700 (5) - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது

இலக்கம் 702(3) - எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது

2.3.5 போதியளவு அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள், வழிகாட்டல்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) மதிப்பூதியக் கொடுப்பனவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன.

**3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :**

**3.1 நிதிசார் விளைவுகள் :**

3.1.1 ஆராய்ச்சி மானியங்களின் பயன்படுத்துகை

(அ) ஒவ்வொரு ஆராய்ச்சி மானியக் கொடுப்பனவு தொடர்பான கோவைகளும் தனித்தனியாக பேணப்பட்டு வருகின்றன. எனினும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு கோவைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ)

அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 176,170 தொகையானது பின்வரும் பெறுனர்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்டவையாகும் :-

திரு. எம் எல். பௌசுல் அமீர்
கலாநிதி எஸ். எம். எம். இஸ்மாயில்
திரு. எம். சீ. எம். அஸ்வர்
திருமதி எஸ். வரதராஜன்
திரு. ஏ. என். அஹமட்
திரு. எம். ஏ. எம். றமீஸ்
திரு. எஸ். குணபாலன்

இப்பெறுனர்கள் அனைவரும் தற்போது அம்முற்பணங்களை தீர்வு செய்து விட்டனர். எனினும் கலாநிதி இஸ்மாயில் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மதிப்பீட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3.1.2 சிக்கமனற்ற கொடுக்கல் வாங்கல் :

(அ) குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. சீர் செய்யப்படும்.

(ஆ) சட்ட மாஅதிபரின் அங்கீகாரத்தோடு வெளியார் சட்டத்தரணிகள் வழக்குகளுக்காக அமர்த்தப்பட்டார்கள். இது தொடர்புடைய ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (தயவு செய்து இணைப்பு 1 இனைப் பார்க்கவும்).

3.1.3 முறையற்ற நிதிப் பயன்பாடு

(அ) ஆண், பெண் ஆகிய இரு பாலாருமான 300 மாணவர்களுக்கு தங்குமிடங்களை வழங்குவதற்கான விடுதி வசதிகள் எம்மிடம் உள்ளன. இவற்றுக்கு 10 கழிவுகூட அலகுகளே காணப்படுகின்றன. கழிவு கூட அலகுகளின் பற்றாக்குறை மாணவர்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்ததனால் மேலதிக கழிவுகூட அலகுகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் பிரகாரம் குளியல் வசதிகளுடன் கூடிய பதினைந்து கழிவுக்கூடங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கல்முனையிலுள்ள மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செலவுக்கணிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 7.5 மில்லியன் வழங்கப்பட்டது. பல்வேறு காரணங்களினால் இதற்கான காசோலை அவர்களால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. எனினும், பின்னர் பொது டென்டர் மூலமான அழைப்புகளின் ஊடாக இவ்வேலைகள் வேறு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றவண்ணமுள்ளன. (தயவு செய்து இணைப்பு 2 இணைப் பார்க்கவும்).

(ஆ) உடற்பயிற்சிக்கூடத் திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 1.6 மில்லியனாகும். IRQUE திட்டத்தின் கீழ் உடற்பயிற்சிக்கூடத்தினை நிர்மாணிக்க பல்கலைக்கழகமானது ரூபா 0.6 மில்லியன் தொகையினை பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் உலக வங்கி இதற்கு அனுமதி வழங்கியிருந்தது. இத்திட்டமானது மாணவர்களின் கற்றல் சூழ்நிலைகளை விருத்தி செய்வதற்கான பகுதிக்குள் காணப்படுகின்றது.

3.1.4 ஒழுங்கற்ற செலவீடுகள் :

(அ) குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. சீர் செய்யப்படும்.

(ஆ) இது தவறுதலாக பல்கலைக்கழக செலவீடாக கழிப்பனவு செய்யப்பட்டுள்ளது. இது 'அனர்த்த முகாமைத்துவக் கணக்கிற்கு' மாற்றப்படும். சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு (மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும்) உதவும் பொருட்டு பெறப்பட்ட பங்களிப்புகளை வைப்புச் செய்வதற்காக இக்கணக்கு உருவாக்கப்பட்டது.

(இ) 68 ஊழிய அங்கத்தவர்கள் புத்தகங்களை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. இவ்விடயம் பல்கலைக்கழக பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, 100% மேலதிக கட்டணத்துடன் குறித்த அங்கத்தவர்களின் சம்பளத்திலிருந்து மொத்தத் தொகையினையும் அறவிடுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அறவீட்டு முறை மீது ஆசிரியர் சங்கத்துடன் எழுந்த பிணக்கு காரணமாக, முதல் தவணைப் பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அதற்கு அடுத்த மாதத்திலிருந்து அறவீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ரூபா 207,312 தொகையில் ரூபா 185,613 ஆனது ஏற்கனவே அறவீடு செய்யப்பட்டுவிட்டது தற்போது ரூபா 21,699.24 மாத்திரமே நிலுவையாகவுள்ளது.

3.2 **நூலக நிர்வாகம் :**

(அ) நூலகக் குழுவானது 22.11.1995 அன்று நடைபெற்ற அதன் முதலாவது கூட்டத்திலேயே பீட உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் புத்தகங்களை இரவல் பெறுவதற்கான உரித்துக்கள் தொடர்பில் ஒரு கொள்கைத் தீர்மானத்தினை எடுத்திருந்தது. பின்னர் 2005.04.21 இல் நடைபெற்ற நூலக குழுக் கூட்டத்தில் இது திருத்தப்பட்டு பல்கலைக்கழக பேரவையின் 42 ஆவது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. பாவனையாளர்களுக்கான நூலக வழிகாட்டி தயாரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட சட்டதிட்டங்களின் உடன்பாட்டின் அடிப்படையில் ஊழியர்கள் நூலகத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாகின்றனர்.

(ஆ) 2005.12.31 வரை 68 ஊழிய அங்கத்தவர்கள் 266 புத்தகங்களை ஒப்படைக்காமல் இருந்தனர். பல்கலைக்கழக பேரவை 2006.02.25 இல் நடைபெற்ற அதன் 85 ஆவது கூட்டத்தில் இப்புத்தகங்களின் பெறுமதியை 100% மேலதிக கட்டணத்துடன் குறித்த அங்கத்தவர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானித்தது. (சில அரிய சேகரிப்புகளுக்கு இக்கட்டணம் 300% ஆகும்) ரூபா 2,07,312 தொகையில் ரூபா 1,85,613 தொகையானது ஏற்கனலே அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 21,699.24 தொகை மாத்திரமே இன்னும் பாக்கியாகவுள்ளது.

(இ) இரண்டு விரிவுரையாளர்கள் நூலகத்தில் தாம் இரவல் பெற்றிருந்த புத்தகங்களை மீள ஒப்படைக்காமல் புலமைப்பரிசில் பேரில் வெளிநாடு சென்றிருந்தனர். அவர்களின் பல்கலைக்கழக ஊழிய அங்கத்துவம் முடிவுற்றுள்ளமையினால் கணக்கு நிலுவையினை அவர்களின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்யப்படுகின்றது.

*3.4 வாக்குமுறி மற்றும் உடன்படிக்கை மீறல் :*

இத்தகவல்கள் கணக்காய்வு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

(அ) வாக்குமுறி உடன்படிக்கைகளை மீறிய மூன்று விரிவுரையாளர்களுக்கும் பதவியை வெற்றிடமாக்கிய அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ)

குறித்த தொகையினை உரிய விரிவுரையாளர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணைக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:**

(அ) ஊழியர்களின் வரவு :

(i) கல்விசார் ஊழியர்களின் வரவுப் பதிவேடுகள் கல்விசார் துறைத் தலைவர்களினால் பேணப்படுகின்றன.

(ii) நிலையான சொத்துப் பதிவேடுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

கலாநிதி ஏ. ஜி. ஹுஸைன் இஸ்மாயில்,
உபவேந்தர்.

பிரதிகள் : 01. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
02. செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
03. தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*2006 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று*

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 2006 | | 2005 | |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | குறிப்பு | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்:** | | | | | |
| ஆதனம், பொறி உபகரணம் | 1 | 42,28,40,321 | | 38,83,09,494 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 2 | 36,07,068 | | 33,53,890 | |
| | | 42,64,47,389 | 42,64,47,389 | 39,16,63,384 | 39,16,63,384 |
| நடைபெறும் வேலைகள் | 3 | | 6,82,51,668 | | 4,35,43,310 |
| | | | 49,46,99,057 | | 43,52,06,694 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| கையிருப்புக்கள் | 4 | 36,45,875 | | 42,17,944 | |
| வர்த்தகமும் ஏனைய பெறவேண்டிவைகளும் | 5 | 4,72,50,109 | | 3,25,70,718 | |
| காசும் அதற்குசமமானதும் | 6 | 88,15,558 | 5,97,11,542 | 53,30,740 | 4,21,19,403 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 55,44,10,599 | | 47,73,26,096 |
| **பொறுப்புக்கள்:** | | | | | |
| நடைமுறைப்பொறுப்புக்கள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 7 | 1,90,26,978 | | 88,24,039 | |
| அட்டுறு செலவுகள் | | - | | 12,51,122 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 8 | 87,22,361 | 2,77,49,339 | 48,98,982 | 1,49,74,142 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள் :** | | | | | |
| பணிக்கொடை, ஒதுக்கம் | 9 | 2,86,12,143 | 2,86,12,143 | 1,23,44,859 | 1,23,44,859 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 5,63,61,482 | | 2,73,19,001 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் | | | 49,80,49,117 | | 45,00,07,095 |

தேறிய சொத்துக்கள்/பொறுப்பு

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் | குறிப்பு | 2006 ரூபா | 2006 ரூபா | 2005 ரூபா | 2005 ரூபா |
|---|---|---|---|---|---|
| திரண்ட நிதி | 10 | | 75,57,19,043 | | 65,18,04,077 |
| ஒதுக்கங்கள் | | | (25,76,69,926) | | (20,17,96,981) |
| மொத்தத் தேறிய சொத்துக்கள்/பொறுப்பு | | | 49,80,49,117 | | 45,00,07,096 |

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

*2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி கூற்று*

செலவுகளின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தி வெளிக்காட்டுகின்றது.

| செயற்பாட்டு வருமானம் | குறிப்பு | 2006 ரூபா | 2005 ரூபா |
|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | | 11,75,00,000 | 13,97,00,000 |
| ஏனைய மானியங்கள் | 11 | 2,98,44,282 | 2,64,00,389 |
| | | 20,63,44,282 | 16,61,00,389 |
| **செயற்பாட்டுச் செலவுகள் :** | | | |
| ஆளணி ஊதியங்கள் | | 12,07,41,582 | 9,36,44,029 |
| பிரயாணம் | | 18,60,004 | 21,52,018 |
| வழங்கல்கள் | | 77,88,831 | 57,18,597 |
| பராமரிப்பு | | 1,47,28,339 | 1,55,65,657 |
| ஒப்பந்த சேவைகள் | | 3,04,81,152 | 2,00,50,622 |
| ஆய்வும் வெளியீடும் | | 2,01,13,719 | 2,15,38,704 |
| பெறுமானத் தேய்வு | | 5,55,22,126 | 2,94,13,085 |
| IRQUE | | 1,14,74,810 | 50,51,619 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள் :** | | 26,27,10,563 | 19,31,34,331 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/(பற்றாக்குறை) | | (5,63,66,281) | (2,70,33,942) |
| நிதிக் கிரயம் | | - | - |
| ஆதன பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம் | | - | - |
| மொத்த செயற்பாடற்ற வருமானம் (செலவுகள்) | | - | - |
| அசாதாரண நடவடிக்கைகளுக்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | (5,63,66,281) | (2,70,33,942) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | | (4,93,336) | (8,79,950) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | (5,58,72,945) | (2,61,53,992) |

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

நேரற்ற முறையிலான காசுப்பாய்ச்சற் கூற்று

*2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சற் கூற்று*

| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சற் கூற்று** | 2006 ரூபா | 2005 ரூபா |
|---|---|---|
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிகை (பற்றாக்குறை): | (5,58,72,945) | (2,61,53,992) |
| **காசு அல்லாத நகர்வுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 3,92,54,842 | 2,94,13,085 |
| ஏனையவை | - | - |
| பணிக்கொடை கொடுப்பனவில் அதிகரிப்பு | 1,62,67,284 | 29,17,375 |
| | (3,50,819) | 61,76,468 |

| | 2006 ரூபா | 2005 ரூபா |
|---|---|---|
| ஊழியர் செலவு தொடர்பான ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு | - | - |
| நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு/குறைவு | (5,72,070) | 8,35,499 |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு/குறைவு | 1,46,79,391 | 50,79,885 |
| நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு/குறைவு | 1,27,75,197 | 31,02,495 |
| | (13,32,125) | (28,12,889) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (16,82,944) | 33,63,579 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் | | |
| உபகரணங்கள், பொறிகள் கொள்வனவு | 9,87,47,204 | 10,06,17,867 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (10,04,30,148) | (10,06,08,177) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் | 10,39,14,966 | 9,51,49,285 |
| மூலதன மானியம் | | |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | 34,84,818 | (21,05,003) |
| கால ஆரம்பத்தில் இருந்து காசும் அதற்குச் சமமானதும் | 53,30,740 | 74,35,743 |
| கால முடிவில் உள்ள காசும் அதற்கு சமமானதும் | 88,15,558 | 53,30,740 |

12-1040/1

---

உபவேந்தர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2007, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2007, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளை பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ் அறிக்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2008, ஓகத்து 15 ஆந் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்களுக்கான முகாமையின் பொறுப்பு :***

இலங்கைக் கணக்கீட்டு நியமனங்களின்படி நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான சமர்ப்பித்தலுக்காக முகாமை பொறுப்பாகவுள்ளது. இந்த பொறுப்பு நிதிக் கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான தயாரித்தலும் நியாயமான சமர்ப்பித்தலும் தொடர்பான வடிவமைப்பு, அமுல்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தலும் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் ஆகும்.

1.3 ***கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும் :***

என்னுயை கணக்காய்வின் அடிப்படையில் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனக்கு பொறுப்புள்ளது. இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றில் வரையறுக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத்

தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகிக்கப்படும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

2.1 ***அபிப்பிராயம் :***

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது 2007, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும், குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுக்கு (இல. 02) அமைய பல்கலைக்கழகத்தின் 2007, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 ***நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் :***

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் :

மீளாய்வாண்டில் கனடியன் சர்வதேச அபிவிருத்தி முகவர் திட்டத்தில் ரூபா 9,73,104 செலவு செய்யப்பட்டிருந்தது. எப்படியிருந்தும், இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 க்கு அமைய அது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள் :

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.-

(அ) மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டின் செலவுகளான பகுதிநேர விரிவுரையாளர் கொடுப்பனவு, தொலைபேசி கட்டணம், மேலதிக நேரம், வீட்டு வாடகை மற்றும் மேலதிக வேலைக் கொடுப்பனவுகள் என்பவற்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 7,96,784 மீளாய்வாண்டின் செலவுகளாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) வங்கி கணக்கில் உள்ள மொத்தம் ரூபா 3,431,063 ஆன நேரடி வரவுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தக பெறுமதிக்கும், மோட்டார் வாகனங்கள் விற்பனை வருமானங்களுக்கும் இடையிலுள்ள ரூபா 1,989,741 ஆன வித்தியாசம் திரண்ட பொறுமானத் தேய்வினை கருத்திற்கெடுத்து கைதவிர்ப்புக் கணக்கைத் தயாரிக்காது நட்டமாக காட்டப்பட்டிருந்தது. அதனால் தேறிய பற்றாக்குறை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டது.

(ஈ) ஒதுக்கீட்டில் விற்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்கீட்டு தவறு காரணமாக ரூபா 1,230,123 குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(உ) சுற்றுமதில் கட்டுவதற்காக அழிக்கப்பட்ட வேலியின் பெறுமதியான ரூபா 326,211 நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

(ஊ) சுனாமி அனர்த்தத்தின்போது இழக்கப்பட்ட/சேதமடைந்த விளையாட்டு பொருட்களின் பெறுமதியான ரூபா 22,372 நிதிக் கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

2.2.3 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் :

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டிருந்தன :-

(அ) பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 40,799,568 சம்பந்தப்பட்ட தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 490,152 ஆன கடன் மீதிகள் ஒரு வருடத்திற்கு மேலாக பல்கலைக்கழகத்தின் பதவியணியினரால் தீர்க்கப்படவில்லை. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தொகையான ரூபா 23,590,976 கடன்பட்டோர் மீதிகளின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை :

ரூபா 5,888,314 தொகையான ஆறு செலவு விடயங்கள் தொடர்பான பதிவேடுகள், கோவைகள், பற்றுச்சீட்டுகள், மேலதிக வேலைகளின் விபரங்கள், பெறுவனவுச் சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் போன்ற சான்றுகள் இன்மையால் திருப்திகரமாக கணக்காய்வில் சான்றுப்படுத்த முடியாதுள்ளது.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாமை:

கீழே குறிப்பிடப்பட்ட விபரங்களின் பிரகாரம் சட்டங்கள், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் அறிவுறுத்துரைகள் என்பவற்றிலுள்ள பல ஏற்பாடுகளுடனான இணங்காமைகள் பல்கலைக்கழக உப வேந்தருக்கு காலத்திற்கு காலம் சுட்டி கட்டப்பட்டிருந்தன :-

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 14 (1)

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 110

(இ) இலங்கை கணக்கீட்டு நியமனங்கள் 18 மற்றும் 24

(ஈ) நிதிப்பிரமாணங்கள் இல. 110, 396(டி), 700(5) மற்றும் 702(3)

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை :

(i) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1
(ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 9

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் :

(i) 1980, பெப்புருவரி 25 இன் இல. 63 இன் பிரிவு 6 (3)
(ii) 1997, நவெம்பர் 13 இன் இல. 48
(iii) 2002, ஓகத்து 02 இன் இல. 807

2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் :

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.-

(அ) 1984, யூன் மாதத்தின் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி பின்வரும் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| விடயம் | தொகை | |
|---|---|---|
| | 2007 ஆம் ஆண்டுக்கான ரூபா | 2006 ஆம்ஆண்டு வரைக்கும் ரூபா |
| (i) ஊக்குவிப்பு படிகள் மற்றும் இரண்டாம் மூன்றாம் மொழிகளின் தேர்ச்சிக்கான சம்பள ஏற்றங்கள் | 430,695 | 2,308,055 |
| (ii) கற்கைநெறிப் படிகள் உள்ளடங்கலாக கணிக்கப்பட்டு செய்யப்பட்டு மேலதிகக் கொடுப்பனவுகள் பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,358,020 | 3,103,691 |

(ஆ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு அலுவலர்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்காக ரூபா 1,736,897 வெகுமானக் கொடுப்பனவாக செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த மேலதிக கொடுப்பனவுகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

2.2.7 அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள்:

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) ஒரு உத்தியோகத்தரின் பதில் கடமைக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 405,219 மேலதிக படிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பல்வேறு உத்தியோகத்தர்களிற்கு மேலதிக வேலைகள், வலைப்பின்னல் நிர்வாகம், இணைப்பாளர் கொடுப்பனவு படி, சட்ட விடயங்கள் போன்றவற்றுக்கு வெகுமானமாக வழங்கப்பட்ட ரூபா 296,532 ஆன கூட்டுத்தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

2.2.8 மேலதிக கொடுப்பனவுகள் :

தட்டச்சு கட்டணம் மற்றும் ஆய்வு கட்டுரை தயாரித்தல் என்பவற்றுக்காக ரூபா 9,000 ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எப்படியிருந்தும் யு. ஜீ. சீ. 1998, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இல. 740 சுற்றறிக்கைக்கமைய கட்டணத்திற்கான ஆக கூடிய மட்டம் ரூபா 4,000 ஆகும்.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :

### 3.1 நிதிசார் செயலாற்றல் :

3.1.1 நிதிசார் விளைவுகள் :

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2006, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் செலவிற்கான அரசாங்க மானியத்தை ரூபா 295,540,594 ஆன பற்றாக்குறையை விளைந்திருந்ததுடன் கணக்கிற்குள் எடுக்க முன் மீண்டுவரும் முன்னைய வருடத்துடன் தொடர்வுடைய பற்றாக்குறையாக ரூபா 259,906,871 ஒப்பிடலாம். மீண்டுவரும் செலவிற்கான அரசாங்க மானியமான ரூபா 251,039,826 கணக்கிற்குள் எடுத்த பின் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 44,500,768 ஆக குறைக்கப்பட்டு இருந்தது. அதே போல முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 203,540,590 ஆன அரசாங்க மானியம் காரணமாக பற்றாக்குறை முன்னைய ஆண்டின் ரூபா 56,366,281 ஆக குறைக்கப்பட்டு இருந்தது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு :

3.2.1 ஆராய்ச்சி மானியங்களின் பயன்பாடு :

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) ஒவ்வொரு ஆராய்ச்சி மானிய செயற்திட்டத்திற்கும் அவை தொடர்பாக கோவைகள் பேணப்பட்டிருந்தன. ஆனால் அதிகளவான ஒப்பந்த படிவங்கள் உபவேந்தரால்/பதிவாளரால் ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மற்றும் சில விண்ணப்பங்கள் ஆராய்ச்சி மானியக் குழுவின் செயலாளரால் ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி குழுவினால் அனுமதிக்கப்பட்ட காலத்தில் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாது கால அவகாசம் பெறுவது வழக்கமான முறையாக இருந்தது. பூரணப்படுத்தப்படாத ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 176,170 செலுத்தப்பட்டிருந்த அதேவேளை உரியதிகதியிலும் பார்க்க நான்கு வருட காலத்திற்கு மேலாக செயற்திட்டங்கள் காலதாமதமடைந்த சந்தர்ப்பங்கள் இருந்தன.

(இ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு குழுவினால் 2006, யூலை 06 இல் நடத்தப்பட்ட கூட்டத்தின் (ஆர்பிசி. இல. 11/2006) படி இறுதி நீடிப்பு 2006, ஓகத்து 27 வரை நிலுவையாக உள்ள ஆராய்ச்சி மானிய முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் நிலுவை முற்பணம் தீர்க்க தவறும் பட்சத்தில் 2006, செத்தெம்பர் 25 இல் இருந்து ஆராய்ச்சி மானியத்தினைப் பெற்ற சம்பந்தப்பட்ட 06 ஆசிரியர்களின் ஆராய்ச்சி மானியத்தை அவர்களின் சம்பளத்தில் 04 சமமான தவணைகளில் முழுவதையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இருந்தும் இத்தீர்மானம் 2007, திசெம்பர் 31 ஆந் திகதி கணக்காய்வு பரிசோதனை வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) பிரதிபண்ணல் கருவி மற்றும் கணணிகளைத் தரமுயர்த்துதலிற்காக ரூபா 251,289 மொத்த செலவு ஏற்பட்டிருந்தது.எப்படியிருந்தும் புதிய கணனிகள் இத்தொகைக்குள் கொள்வனவு செய்திருக்கலாம் என தோன்றுகின்றது.

(ஆ) பல்கலைக்கழகம் பிரதிபண்ணல் செலவாக ரூபா 73,484 செலவு செய்துள்ளது. ஆனால் பல்கலைக்கழகத்தில் 25 பிரதிபண்ணல் இயந்திரங்கள் உள்ளன.

(இ) உபவேந்தரால் நான்கு தொலைபேசி இணைப்புக்கள் பயன்படுத்தப்படுகிறது. இவற்றுக்கான தொலைபேசி மொத்த கட்டணங்கள் ரூபா 2,42,535 ஆகும். மேலும் கையடக்க தொலைபேசிக்கான அழைப்புக் கடட்ணமாக ரூபா 66,612 உம் பல்கலைக்கழகத்தினால் தீர்க்கப்பட்டுள்ளது.

3.2.3 முறையற்ற நியமனங்கள் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:

(அ) மூன்று விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்தில் கடமையை பொறுப்பேற்ற திகதியில் இருந்து 8 வருடங்கள் சேவையை பூர்த்தி செய்துள்ளனர். இருந்தபோதிலும் ஆராய்ச்சி பிரிவுடன் சேர்ந்த பட்டப்படிப்பின் பட்டப்படிப்பும், கட்டுரையிலும் சித்திசெய்யாதவர்களின் பல்கலைக்கழக சேவைகள் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் தாபனக் விதிக் கோவையின் அத்தியாயம் III இன் பிரிவு 21.1.1 இற்கு அமைய அவர்கள் நீக்கப்படாமல் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றனர் ;

(ஆ) கடமையை பொறுப்பேற்ற திகதியில் இருந்து 8 வருடங்கள் சேவையை பூர்த்தி செய்த 4 விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் III இன் பிரிவு 21.1.1 இற்கு அமைய நீக்கப்படாமல் சேவையாற்றுகின்றனர். பதிலாக, யூ. ஜீ. சீ. இன் 1996, நவெம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு மாறாக திறந்த விளம்பரத்தின் மூலம் பிரிசுக்கப்படாது இவர்களுக்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களாக பதவியுயர்வும் வழங்கப்பட்டுள்ளன ;

(இ) சமூக விஞ்ஞான திணைக்களத்திற்கு பதில் தலைவராக இரண்டு மாதங்கள் மட்டும் பணியாற்றிய ஒரு உத்தியோகத்தருக்கு 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக பீடாதிபதியாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது;

(ஈ) ஒரு உத்தியோகத்தர் உதவி விரிவுரையாளராக 8 வருடங்கள் முதுமானிப் பட்டப்படிப்பினை நிறைவு செய்யாது சேவையாற்றியிருந்தார். எப்படியிருந்தும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் III பிரிவு 21.1.1 இற்கு அமைய நீக்கப்படாமல் சேவையில் உள்ளனர். இதற்கு பதிலாக, அவரிற்கு சிரேஷ்ட விரிவுரையாளராக, இஸ்லாமிய பாடங்கள் அரபு மொழி திணைக்கள தலைவர் மற்றும் இஸ்லாமிய பாடங்கள் மற்றும் அரபி மொழி பீடாதிபதியாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

3.2.4 பயனற்ற செலவினம் :

தீ விபத்து தொடர்பான விசாரணைக்கென 3 நபர்களுக்கு ரூபா 85,200 வெகுமானமாக வழங்கப்பட்டுள்ளது. எப்படியிருந்தும் அந் நபர்களினால் இதுவரையிலும் விசாரணைகள் முற்றுப்பெறவில்லை.

3.2.5 பயன்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் :

மீளாய்வாண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,082,934 பெறுமதியான புத்தகங்கள் மாணவர்களின் பாவனைக்காக நூலகத்திற்கு கையளிக்கப்படாது, பீடகங்களிலிலும், திணைக்களங்களிலும் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

3.2.6 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவுகளில் ஒழுங்கீனங்கள் :

(அ) பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,86,000 ஆன முற்பணங்கள் செலவு செய்யப்படாது 3-12 மாத கால பகுதிக்குள் மீளளிப்புச் செய்யப்பட்டு உள்ளன. இச் செயல்பாடானது தற்காலிக பண மோசடிக்கு வழிவகுக்கலாம்.

(ஆ) மீளாய்வாண்டு காலத்திலும் முன்னைய வருடத்திலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,690,877 உள்ளதும் 2007, திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாதுள்ளது.

3.2.7 வாகனங்களின் பாவனை :

பல்கலைக்கழகத்தின் அணியில் 10 வாகனங்கள் உள்ளன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) நாளாந்த ஓட்ட அட்டவணைகளின்படி பல்கலைக்கழகத்தில் உள்ள 10 வாகனங்கள் மீளாய்வாண்டில் 131,275 கி. மீ. செயலாற்றியும் 22,511 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தியும் உள்ளன. எப்படியிருந்தும் இலங்கை போக்குவரத்து சபையினால்

(எஸ்எல்ரிபி) வழங்கப்பட்ட வாகனத்தின் எரிபொருள் பாவனை சான்றிதழினை அடிப்படையாகக் கொண்டு வாகனங்கள் 16,918 லீற்றர்களை நுகர்ந்திருக்க வேண்டும். ஆகையால், மேலதிக எரிபொருள் பாவனையான 5,593 லீற்றர்களிற்கான அண்ணளவான செலவீனம் ரூபா 4,34,273 என்று அவதானிக்கப்பட்டுள்ளது ;

(ஆ) உறுதிச் சீட்டுடன் இணைக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களில் உள்ள எரிபொருள் பாவனை அளவு வாகனத்தின் எரிபொருள் கொள்கலனின் கொள்ளளவை விட அதிகமானது. இது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும்.

(இ) பல்கலைக்கழகத்தில் 10 வாகனங்கள் இருந்தபோதிலும் மேலதிகமாக தனிநபர்களிடமிருந்து மீளாய்வாண்டில் வாடகைக்கு வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 2,931,491 ஆன வாடகைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது. வாகனப் பாவனையில் சிக்கன முறை பயன்படுத்தப்படவில்லை. உத்தியோகத்தர் குழுக்களாக பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்படவில்லை. பதிலாக தனி உத்தியோகத்தர்கள் தனிப் பயணத்திற்கு பயன்படுத்தியுள்ளார். இதனுடன் தொடர்பாக, உபவேந்தர் 4 வாகனங்கள் மட்டுமே தூரப் பயணங்களுக்கு பாவிப்பதற்கு தயாராக இருப்பதால் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

3.2.8 நூலக காவல் முறைமை பெறுகை :

மீளாய்வாண்டு காலப்பகுதியில் நூலகத்திற்கென காவல் முறைமையினை கொள்வனவு செய்வதற்காக மொத்தம் ரூபா 7,302,500 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன ஆகும். இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன :-

(அ) கேள்வி மனுக்கோரலிற் முன்னர் அளவீடுகள் முடிவு செய்யப்படவில்லை. பதிலாக கேள்வி தரகர்களின் அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட்டுள்ளது ;

(ஆ) ஒரு கேள்வி மனுவினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ரூபா 7,350,000 கான கொள்வனவு முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது ;

(இ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2007, சனவரி 07 இன் முன்பு இம்முறைமை நிறுவப்பட வேண்டும். எப்படியிருந்தும் 2008, யூன் 30 வரை வேலை முடிவுறுத்தப்படவில்லை. காலம் தாழ்த்தியதற்கான தண்டப் பணம் அறவிடப்படவில்லை ;

(ஈ) 2005/2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ரூபா 1,192,980 வில் நூலகத்திற்கான ஒரு சட்ட குறியீட்டு முறைமையினை இதே நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டது. எப்படியிருந்தும் எதுவித பாவனையும் இன்றி இந்த முறைமை கைவிடப்பட்டுள்ளது. ஆகையால் மொத்த செலவீனமும் பயனற்றதாக உள்ளது. இவற்றுடன் தொடர்புடைய, இது தொடர்பாக உபவேந்தர், நூலக காவல் முறைமை கீழ் பொதுக் கேள்வி மனு மற்றும் கேள்வி மனுவில் உள்ள அனைத்து தேவைப்பாடுகள் மாதிரிகள் உள்ளடங்கலாக கொள்வனவுக்காக கோரப்பட்டுள்ளது. ஆகையால், கிடைத்த மனுக்கள் செயன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. அம் மனுவின் பெறுமதி ரூபா 20 மில்லியனிற்கு குறைந்திருந்தமையினால் இதனை பல்கலைக்கழக கேள்வி சபை கையாள்கிறது என்று குறித்துரைந்திருந்தார்.

3.2.9 முறிகள் மற்றும் உடன்படிக்கைகளை மீறுதல் :

புலமைப்பரிசில் மூலம் வெளியூர் சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் நாடு திரும்பாமை அல்லது பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் பெற்று சேவையை முடிவுறுத்தியமை தொடர்பான தகவல்கள் முறிகள் மற்றும் உடன்படிக்கைகளை மீறிய விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகையால், விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை உறுதிப்படுத்த முடியவில்லை.

3.2.10 சொத்துக்களின் மெய்மையாய்வு :

நிதிப்பிரமாணம் 756 க்கு அமைய சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு 1996 ஆம் ஆண்டிலிருந்து செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2.11 பாதீட்டிற்கெதிராக பாரிய வேறுபாடுகள் :

பாதீடப்பட்ட செலவீனம் மற்றும் உண்மைச் செலவீனம் என்பவற்றிற்கு இடையே பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு முகாமைத்துவ கட்டுப்பாட்டிற்கான வினைத்திறன் உள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டியது.

3.2.12 விடுதி நிர்வாகம் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய விடுதிக் கட்டணம் ரூபா 1,10,700 ஆக குறித்த இணைப்பில் காட்டப்பட்டுள்ள போதிலும் ரூபா 31,500 விற்கு மட்டுமே விபரங்கள் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களினால் பழுதாக்கப்பட்ட மற்றும் இழக்கப்பட்ட விடுதிச் சொத்துக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இறுதி வருட மாணவர்களினால் ஏற்பட்ட பழுதாக்கப்பட்ட மற்றும் இழப்புகளின் மொத்த பெறுமதி ரூபா 34,035 ஆகும். எனினும் இந்த இழப்புகளை அறவிட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் :**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையில் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் சம்பந்தமாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) பொருள் இருப்பு பதிவேடு பேணல்
(இ) கடன்பட்டோர்
(ஈ) கணக்கீடு
(உ) முற்பணங்களின் தீர்ப்பனவுகள்

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமையதிபதி.

16.03.2009

எமது இல. : எப்ஏ/வீசீ/பீ/ஏஜீ/2007

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,
கொழும்பு 07.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 108(2) இற்கு அமைவாகவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைவாகவும் 2007, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை**

மேற்படி விடயம் சார்பாக என்ஈ/ஏஎம்/பீ/எஸ்ஈயுஎஸ்எல்/2007 என்ற இலக்கம் கொண்டதும் 2008, திசெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்டதுமான தங்களின் கடிதம் தொடர்பான எமது அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**2.2 கணக்குகள் மீதான கருத்துரைகள் :**

2.2.1 இலங்கை கணக்கீட்டுக் கூற்றுக்கள் :

நிதியுதவி அளிக்கப்படும் திட்டங்கள் பல்கலைக்கழக வருடாந்த கணக்குகளில் உள்ளடக்கப்படுவதில்லை என்பதே பல்கலைக்கழக முறைமையில் காணப்படும் பொதுவான நடைமுறையாகும். எனினும், எதிர்காலத் தேவை கருதி IRQUE திட்ட கணக்குகளை பல்கலைக்கழக கணக்குகளில் நாம் உள்ளடக்கியுள்ளோம். அவ்வாறே CIDA கணக்குகளும் பல்கலைக்கழக கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படும்.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள் :

(அ) இது தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 3,431,063 தொகையான நேரடிப் பற்றுக்கள் ஏற்கனவே கணக்கிணக்கம் செய்யப்பட்டு உரிய கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ) அனைத்து புத்தகப் பதிவுகளும் சீர்செய்யப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வொதுக்கம் தற்போது சரியாக கணக்கிலிடப்பட்டுள்ளன.

(உ) சம்மாந்துறை, பிரயோக விஞ்ஞான பீடத்தில் ரூபா 326,211.00 பெறுமானத்திற்கு சுற்றுவேலி அமைக்கப்பட்டதுடன் அது இன்னமும் அங்கு காணப்படுகின்றது.

(ஊ) இப்பெறுமானத்தை கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

2.2.3 பெறவேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள் :

(அ) வருடாந்த கணக்குகளை தயார் செய்வதற்கு முன்னர் வருமதியாளர்களும் சென்மதியாளர்களும் 2007.12.31 இல் உள்ளவாறான தத்தமது நிலுவைகளை உறுதிப்படுத்தித் தருமாறு வேண்டப்பட்டனர். அவர்களுள் சிலர் மாத்திரமே பதிலளித்துள்ளனர்.

(ஆ) செலுத்தப்படாமல் காணப்படும் கடன் நிலுவைகளானவை பதவியை இராஜினாமா செய்த, பதவியை வெற்றிடமாக்கிய அல்லது இறந்துபோன ஊழியர்களுக்கு உரியவையாகும். இந்நிலுவைத் தொகைகளை சம்பந்தப்பட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) வருமதியாளர்கள் தொடர்பான வயதுப் பகுப்பாய்வு எதிர்காலக் கணக்குகளில் காட்டப்படும்.

2.2.4 கணக்காய்விற்கு சான்றின்மை

இது பின்வருனவற்றை உள்ளடக்கியுள்ளது:-

- விடுதிகளாகப் பெறப்பட்ட வீடுகளுக்கு செலுத்தப்பட்ட வாடகை
- வருகை தரும் மருத்துவ அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட கட்டணம்
- பரிசீலனைக்குழு உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு

இச் செலவினங்களுக்கான ஆவணங்கள் இது தொடர்பான வெளச்சர் படிவங்களோடு காணப்படுவதுடன் இவை கணக்காய்வுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களோடு இணங்காமை :

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)

இலங்கை கணக்கீட்டு நியமங்களை நாம் பின்பற்றியுள்ளோம். இது கணக்காய்வு அபிப்பிராயத்திலும் பிரதிபலிக்கின்றது.

ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தினையுடைய காசோலைகளை இரத்துச்செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

தொலைவுகள் தொடர்பான பதிவுகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கேள்வி அளிப்பு கடிதங்களின் நகல் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்புதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து கணக்காய்வு அறிக்கைகளுக்கும் உரிய முறையில் பதிலளிக்கப்படுவதோடு அதன் பிரதிகள் தொடர்புடைய அதிகாரிகளுக்கும் தபாலிடப்படுகின்றன.

(உ) தாபனக் கோவை

(i) பிரிவு 3.1 - அத்தியாயம் XXVII - கல்விசார் ஊழியர்களின் வரவுப் பதிவேடுகள் கல்விசார் துறைத் தலைவர்களினால் துறைப் பிரிவு மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன.

(ii) பிரிவு 9 - அத்தியாயம் XXVII - வாகனங்களுக்கான லொக் புத்தகங்கள் நிர்வாகப் பிரிவினால் பேணப்பட்டு வருகின்றன.

(ஊ) பமாஆ சுற்றறிக்கைகள் -

(i) 1980, பெப்புருவரி 25 இன் இலக்கம் 63 இன் பிரிவு 6 (3)
எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) 1997, நவெம்பர் 13 இன் 48 ஆம் இலக்கம்
நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(iii) 2002, ஓகத்து 02 ஆம் ஆண்டின் 807 ஆம் இலக்கம்
கடந்த ஐந்து வருடங்களில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தினை எம்மால் கூட்ட இயலவில்லை.

2.2.6 போதியளவு அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் :

(அ) மற்றும் (ஆ) தொடர்புடைய கொடுப்பனவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள், வழிகாட்டல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன.

2.2.7 அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள்

(அ) பதில் பதிவாளரது நியமனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியோடு மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் எப்போதும் பல்கலைக்கழக பேரவையின் அனுமதியுடனேயே செலுத்தப்படுகின்றன.

2.2.8 அதிக கொடுப்பனவு :

ஆராய்ச்சிக் கட்டுரைக்கான கொடுப்பனவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகளின் பிரகாரம் செலுத்தப்பட்டன.

**3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு:**

**3.2 செயற்பாட்டு மீளாய்வு :**

3.2.1 ஆராய்ச்சி மானியங்களின் பயன்படுத்துகை :

(அ) அனைத்து கோவைகளும் தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவானது சில ஆராய்ச்சியாளர்களுக்கு கால நீடிப்பினை வழங்கியுள்ளது.

(இ) ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக ஆராய்ச்சி மானிய முற்பணங்களை அறவீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி மானிய முற்பண நிலுவைகளின் ஒரு பகுதி ஏற்கனவே அறவீடு செய்யப்பட்டு விட்டது.

3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் :

(அ) பிரதி எடுக்கும் இயந்திரங்கள் மற்றும் கணனிகள் என்பவற்றை திருத்தியமைத்து புதுப்பிப்பதற்கான செலவீடுகள் மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) அவசர தேவைகளின் நிமித்தம் நிதி வழங்கும் முகவர்களுக்கு திட்டப் பிரேரணை ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பிக்கும் பொருட்டு பிரதியெடுத்தல்களுக்காக கொழும்பில் இச்செலவினம் ஏற்பட்டது.

(இ) உப வேந்தர் ஒரு நிலையான தொலைபேசி இணைப்பினையும் ஒரு கையடக்கத் தொலைபேசியையும் பாவித்து வருகின்றார். எனினும் பெக்ஸ் இயந்திரத்திற்காகவும் உதவிப் பதிவாளருக்காகவும் வேறு தனியான இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிதிகள் விடுதியில் உள்ள தொலைபேசி இணைப்பானது பொலீஸாரினாலும் பல்கலைக்கழக பாதுகாப்பு தரப்பினராலும் பாவிக்கப்படுகின்றன.

3.2.3 முறையற்ற நியமனங்கள் :

(அ) எட்டு வருடங்களைப் பூர்த்தி செய்தும் பட்டப்படிப்பு பட்டங்களை பெறத்தவறிய விரிவுரையாளர்கள் பதவி நிறுத்தம் செய்யப்பட்டு தற்காலிக விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டனர். எட்டு வருடங்களின் பின்னரான காலப்பகுதியில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக கொடுப்பனவுகள் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகமானது ஒரு தொலைதூரப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் பலமுறை விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சிரேஷ்ட கல்விசார் ஆளணியினரை பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக, பல்கலைக்கழக பேரவையானது எட்டு வருட சேவையுடன் பட்டப்பின்படிப்பு பட்டங்களை பூர்த்தி செய்திருந்த தற்காலிக விரிவுரையாளர்களை இதற்கு நியமித்தது.

(இ) சமூக விஞ்ஞானங்கள் துறையின் பதில் தலைவர் ஒரு போதும் பதவியுயர்த்தப்படவில்லை. அவர் பீட சபையின் அதிகப்படியான வாக்குகளால் பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

(ஈ) குறித்த விரிவுரையாளர் ஐந்து வருடங்களுக்கும் மேலாக சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். தாபனக் கோவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றிக்கைகள் என்பவற்றிற்கு அமைவாக அவர் தரம் 1 இற்கு

பதவியுயர்த்தப்பட்டுள்ளார். மேலும் குறித்த காலப் பகுதியில் சேவையாற்றியவர்களுள் அவர் மாத்திரமே சிரேஷ்ட கல்விசார் உறுப்பினராக இருந்தமையினால், அவர் துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பீட அவை அவரை பீடாதிபதியாகத் தெரிவு செய்தது.

எனவே மேற்படி நியமனங்களில் எதுவித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என நாம் உறுதியாக எண்ணுகின்றோம்.

3.2.4 பயனற்ற செலவீடுகள் :

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2.5 பாவனையற்ற மற்றும் குறைந்த பாவனையுடைய சொத்துக்கள் :

ரூபா 2,082,934 பெறுமதியான புத்தகங்கள் கல்விசார் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் பாவனைக்கென பீடங்களின் நூலகங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டன.

3.2.6 முற்பணங்களை வழங்குவதிலும் தீர்ப்பனவு செய்வதிலும் முறைகேடுகள் :

(அ) எதிர்காலப் பின்பற்றுகைக்காகக் குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 2007, திசெம்பர் இற்கு முன்னர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டு விட்டன. ஆயினும் 2008, சனவரியில் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவினை ஏற்பாடு செய்யும் பொருட்டு 2007 திசெம்பர் இல் வழங்கப்பட்டிருந்த முற்பணக் கொடுப்பனவுகள் கணக்காய்வுக் காலத்தில் நிலுவையாகக் காணப்பட்டது.

3.2.7 வாகனங்களின் பயன்படுத்துகை :

(அ) வாகனங்களில் அனேகமானவை 10 வருடங்களுக்கு மேற்பட்டவையாக இருந்தமையினால் அவற்றின் பராமரிப்புச் செலவு அதி உயர்வாகக் காணப்பட்டது. அவ்வாகனங்களில் அனேகமானவை திறைசேரியின் அனுமதியோடு தற்போது விற்பனை செய்யப்பட்டுவிட்டன.

(ஆ) இது மீளவும் பரீட்சிக்கப்பட்டு அவ்வித்தியாசத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) பத்து வாகனங்களுள், ஆறு வாகனங்கள் உள்ளார்ந்த பயணங்களுக்கு பாவிக்கப்படுவதோடு நான்கு வாகனங்கள் மட்டுமே தொலைதூர பயணங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. எனவே, தூர பயணங்களுக்காக மேலதிக வாகனங்கள் தேவைப்படும்போது தனியார் வாகனங்களை பல்கலைக்கழகம் வாடகைக்கமர்த்தியது.

வாடகைக்கமர்த்தப்படும் வாகனங்கள் தொடர்பான செலவுகளைக் குறைக்க எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும்.

3.2.8 நூலக பாதுகாப்பு முறைமையின் கொள்வனவு :

நூலக பாதுகாப்பு முறைமையானது பொது கேள்வி அறிவித்தல் மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. கேள்விப் பத்திர ஆவணமானது விரிவான தேவைப்பட்டியல் உட்பட அனைத்து தேவைப்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. ஆகவே, கிடைக்கப்பெற்ற கேள்வி மனு பரிசீலிக்கப்பட்டது. கேள்வி மனுவின் பெறுமதி ரூபா 20 மில்லியனுக்கும் குறைவானது என்பதால் இது பல்கலைக்கழக கேள்விச் சபையினால் (திணைக்கள கேள்விச் சபை) கையாளப்பட்டது.

3.2.9 வாக்குமுறி மற்றும் உடன்படிக்கை மீறல் :

விடுமுறை மற்றும் வழங்கல் குழுவானது வாக்குமுறி மீறல் தொடர்பான நிலுவைகளை அறவிட ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

3.2.10 சொத்துக்களின் சரிபார்த்தல் :

2006 ஆம் ஆண்டு வரை சொத்துக்கள் சரிபார்த்தல் செய்யப்பட்டுள்ளது.

3.2.11 பாதீட்டுக்கெதிரான பாரிய விலகல்கள் :
எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

3.2.12 விடுதி நிர்வாகம் :
மாணவர்களினால் சேதப்படுத்தப்படும் பொருட்களின் பெறுமதியானது எப்போதுமே குறித்த மாணவர்கள் சான்றிதழ் பெறும்போது அவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது.

4. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**
குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது -

(அ), (ஆ) (இ) மற்றும் (ஈ) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

கலாநிதி ஏ. ஜி. ஹுஸைன் இஸ்மாயில்,
உபவேந்தர்.

பிரதிகள் : 01. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
02. செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
03. தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

*2007, திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று*

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 2007 | | 2006 | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்:** | குறிப்பு | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | | | |
| ஆதனம், பொறி உபகரணம் | 1 | 77,94,23,872 | | 67,65,04,769 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 2 | 79,46,200 | | 36,07,068 | |
| | | 78,73,70,072 | 78,73,70,072 | 68,01,11,837 | 68,01,11,837 |
| நடைபெறும் வேலைகள் | 3 | | 8,08,63,364 | | 6,82,51,668 |
| | | | 86,82,33,435 | | 74,83,63,505 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| கையிருப்புகள் | 4 | 45,30,459 | | 36,45,875 | |
| வர்த்தகமும் ஏனைய பெறவேண்டியவைகளும் | 5 | 6,74,75,695 | | 4,72,50,109 | |
| காசும் அதற்கு சமமானதும் | 6 | 82,75,704 | 8,02,81,858 | 88,15,558 | 5,97,11,542 |
| மொத்த சொத்துக்கள் | | | 94,85,15,293 | | 80,80,75,047 |
| **பொறுப்புகள்** | | | | | |
| ***நடைமுறைப் பொறுப்புக்கள்:*** | | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | | 4,07,99,568 | | 1,90,26,978 | |
| அட்டுறு செலவுகள் | 7 | - | | | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 8 | 76,92,360 | 4,84,91,928 | 87,22,361 | 2,77,49,339 |
| ***நடைமுறையல்லா பொறுப்புக்கள்:*** | | | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | 9 | 2,88,49,787 | | 2,86,12,143 | |
| பெறுமானத் தேய்வொதுக்கம் | | 29,16,95,206 | 32,05,44,993 | 25,36,64,448 | 28,22,76,591 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 36,90,36,921 | | 31,00,25,930 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் | | | **57,94,78,372** | | **49,80,49,117** |
| **தேறிய சொத்துக்கள்/பொறுப்பு :** | | | | | |
| திரண்ட நிதி | 10 | | 86,78,22,998 | | 75,57,19,043 |
| ஒதுக்கங்கள் | | | (28,83,44,626) | | (25,76,69,926) |
| மொத்த தேறிய சொத்துக்கள்/பொறுப்பு | | | **57,94,78,372** | | **49,80,49,117** |

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

*2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று*

*செலவுகளின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தி வெளிக்காட்டுகின்றது-*

| **செயற்பாட்டு வருமானம்:** | குறிப்பு | 2007<br>ரூபா | 2006<br>ரூபா |
|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | | 20,92,39,000 | 17,65,00,000 |
| ஏனைய மானியங்கள் | 11 | 4,56,03,094 | 2,98,44,282 |
| | | **25,48,42,094** | **20,63,44,282** |
| **செயற்பாட்டுச் செலவுகள் :** | | | |
| ஆளணி ஊதியங்கள் | | 14,94,22,608 | 12,07,41,582 |
| பிரயாணம் | | 25,93,276 | 18,60,004 |
| வழங்கல்கள் | | 1,16,28,320 | 77,88,831 |
| பராமரிப்பு | | 84,83,717 | 1,47,28,339 |
| ஒப்பந்த சேவைகள் | | 3,10,67,794 | 3,04,81,152 |
| ஆய்வும் வெளியீடும் | | 3,11,06,037 | 2,01,13,719 |
| பெறுமானத் தேய்வு | | 4,30,03,684 | 5,55,22,126 |
| IRQUE | | 2,20,37,426 | 1,14,74,810 |
| மொத்த செயற்பாட்டுச் செலவுகள் | | **29,93,42,862** | **26,27,10,563** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/(பற்றாக்குறை) | | (4,45,00,768) | (5,63,66,281) |
| நிதிக் கிரயம் | | - | - |
| ஆதன பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம் | | - | - |
| மொத்த செயற்பாடற்ற வருமானம் (செலவுகள்) | | - | - |
| அசாதாரண நடவடிக்கைகளுக்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | (4,45,00,768) | (5,63,66,281) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | | (1,38,26,068) | (4,93,336) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | **(3,06,74,700)** | **(5,58,72,945)** |

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

*2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று*

| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் :** | 2007<br>ரூபா | 2006<br>ரூபா |
|---|---|---|
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிகை (பற்றாக்குறை) | (3,06,74,700) | (5,58,72,945) |
| **காசு அல்லாத நகர்வுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 3,80,30,758 | 3,92,54,842 |
| ஏனையவை | - | - |
| பணிக்கொடை கொடுப்பனவில் அதிகரிப்பு | 2,37,644 | 1,62,67,284 |
| | 75,93,702 | (3,50,819) |
| ஊழியர் செலவு தொடர்பாக ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு | - | - |
| நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு /குறைவு | 8,84,584 | (5,72,070) |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு /குறைவு | 2,02,25,585 | 1,46,79,391 |
| நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு /குறைவு | 2,07,42,589 | 1,27,75,197 |
| | 3,67,580 | (13,32,125) |

| | 2007<br>ரூபா | 2008<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | 72,26,122 | (16,82,944) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| உபகரணங்கள், பொறிகள் கொள்வனவு | 11,98,69,931 | 9,87,47,204 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (11,26,43,809) | (10,04,30,148) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் | | |
| மூலதன மானியம் | 11,21,03,955 | 10,39,14,966 |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (5,39,854) | 34,84,818 |
| கால ஆரம்பத்தில் இருந்த காசும் அதற்கு சமமானதும் | 88,15,558 | 53,30,740 |
| கால முடிவில் உள்ள காசும் அதற்கு சமமானதும் | 82,75,704 | 88,15,558 |

12-1040/2

---

## கணக்காய்வாளர் திணைக்களம்

உபவேந்தர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

### இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2008 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளை பின்தொடர்ந்து எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ் அறிக்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2009, செத்தெம்பர் 07 இல் வழங்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு :***

இலங்கைக் கணக்கீட்டு நியமனங்களின்படி நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான சமர்ப்பித்தலுக்காக முகாமை பொறுப்பாகவுள்ளது. இந்த பொறுப்பு நிதிக் கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான தயாரித்தலும் நியாயமான சமர்ப்பித்தலும் தொடர்பான வடிவமைப்பு, அமுல்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குவதுடன்பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தலும் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் ஆகும்.

1.3 ***கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும் :***

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனக்கு பொறுப்புள்ளது. இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகிக்கப்பட்டும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது சிறந்த அறிவுக்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம்

*இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.*

**2. நிதிக்கூற்றுக்கள் :**

**2.1 அபிப்பிராயம் :**

*எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது 2008, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைட இலங்கை தென்கிழக்குப் பல்ககலைக்கழகத்தின் 2008, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையுளும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.*

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் :**

*2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் :*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.*

*(அ) மீளாய்வாண்டில் கனடா சர்வதேச அபிவிருத்தி முகவர் (சீஐடிஏ) செயற்திட்டத்திற்கு ரூபா 1,33,79,219 தொகையான செலவினம் செய்யப்பட்டது. எனினும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் பெறுமானத் தேய்வுப் பட்டோலை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.*

*2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள் :*

*பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிப்பட்டன :-*

*(அ) கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 8,58,425,330 கூட்டுமொத்தத் தொகையான நிலையான சொத்துக்கள் புத்தகப் பெறுமதியின் அடிப்படையிலிருந்தன. எனினும், இந்தச் சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) சில வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 13,26,602 மற்றும் ரூபா 3,50,604 கூட்டுத்தொகையான முறையே நேரடி வரவுகள் மற்றும் நேரடி செலவுகள் என்பன ஆய்வு செய்யப்பட்டு, கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.*

*(இ) சுற்றுமதிலைக் கட்டுவதற்காக இடித்தழிக்கப்பட்ட ரூபா 3,26,211 பெறுமதியான வேலி தொடர்ந்தும் நிதிக் கூற்றுக்களில் ஒரு சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.*

*(ஈ) சுனாமி அனர்த்தத்தினால் நட்டமான சேதமடைந்த ரூபா 22,372 பெறுமதியான விளையாட்டுப் பொருட்கள் நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது.*

*(உ) ரூபா 14,000 கூட்டுமொத்த தொகையான மூலதனத் தன்மையான செலவினம் தவறுதலாக செலவினத்திற்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

*(ஊ) வருமானத்தை மிஞ்சிய, மேலதிக செலவினம் ஐந்தொகையில் புறம்பான விடயமாகக் காட்டுவதற்குப் பதிலாக வருடாவருடம் பொது ஒதுக்கக் கணக்கிற்கு தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது.*

*(எ) நிலையான சொத்துக்களின் பயன்பாட்டுக்காலம், கொள்வனவுத் திகதி மற்றும் தொலைந்த விடயங்கள் என்பவற்றைக் கருத்திற்கெடுத்து ஒவ்வொரு நிலையான சொத்திலும் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. பதிலாக, 2008, திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒவ்வொரு வகைச் சொத்தின் பேரேட்டு மீதியின் அடிப்படையில் கணக்குகளில் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*(ஏ) உடற்பயிற்சி மண்டபத்தின் அறைக்கு ரூபா 4,29,840 பெறுமதியான கண்ணாடி மற்றும் கண்ணாடி பொருத்திகள் என்பவற்றிற்கான கொடுப்பனவு மீண்டுவரும் செலவினமாகக் கருதப்பட்டு, செலவினத்திற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

(ஐ) ஆராய்ச்சி மானியம் மற்றும் பிரயாணப் பெட்டியின் பெறுமதி தொடர்பாக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 32,895 ஆன தொகை சம்பந்தப்பட்ட கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் என்பவற்றின் கிரயம் ரூபா 63,43,878 ஆக இருந்த அதே சமயம் பல்கலைக்கழக நூலகரினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றின்படி கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் கிரயம் ரூபா 77,52,957 ஆக இருந்தது. ரூபா 14,09,079 ஆன வித்தியாசத்திற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகை புத்தகங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவாக இருந்ததுடன் நூலகர் புத்தகங்களின் கோரிக்கைப் பெறுமதியைக் காட்டியிருந்தாக உபவேந்தர் குறித்துரைத்திருந்தார்.

2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(அ) பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 1,69,51,396 கூட்டுமொத்தத் தொகையான பதவியினர் கடன் மீதிகள் பல்கலைக்கழகத்தின் பதவியினரால் ஒரு ஆண்டிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவிகளை வறிதாக்கிய/ஓய்வு பெற்ற/பதவி விலக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதவியினரால் ஒரு ஆண்டிற்கு மேலாக ரூபா 5,21,914 ஆன கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக கடன் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின்படி பிணையாளரிடமிருந்து தொகையை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை :

கணக்குளிலுள்ள ரூபா 4,68,47,547 கூட்டுமொத்தத் தொகையான எட்டு விடயங்களை பதிவேடுகள், கோவைகள், செலவின விபரங்கள் பட்டியல்கள், மேலதிக வேலைகளின் விபரங்கள், பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் என்பன இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை :

பின்வரும் சட்டங்கள் நிதிப் பிரமாணங்கள் மற்றும் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவை என்பவற்றின் பல ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை :-

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம்

(i) பிரிவு 109

(ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் பிரிவு 14(1)

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள்

(i) 2002, ஓகத்து 02 இன் இல. 807

(ii) 1997, நவெம்பர் 13 இன் இல. 48

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

(i) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1

(ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 9

(உ) நிதிப் பிரமாணங்கள்

இலக்கங்கள் - 110, 700(5), 702(3) மற்றும் 396(ஈ)

(ஊ) தாபன விதிக் கோவை

அத்தியாயம் XIV இன் பிரிவு 8.2

(ஏ) 2008, யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம்.

*3.* ***நிதிசார் செயற்பாட்டு மீளாய்வு*** :

*3.1* ***நிதி மீளாய்வு :***

*3.1.1 நிதி விளைவுகள் :*

*சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2008 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 354,460,840 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 295,540,594 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். மீளாய்வாண்டுக்கான மீண்டுவரும் செலவினத்திற்காகக் கிடைத்த ரூபா 251,837,978 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னர், நிதிசார் விளைவுகளின் பற்றாக்குறை ரூபா102,622,855 ஆகக் குறைக்கப்பட்டிருந்ததை முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கான ரூபா 251,039,826 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்தபின்னருள்ள அந்த ஆண்டிற்கான ரூபா 44,500,768 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 58,122,087 ஆன மேலும் ஒரு வீழ்ச்சியை அது காட்டுகின்றது.*

*3.1.2 தெளிவான ஒழுங்கீனங்கள்/முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் :*

*13 ஆராய்ச்சிப் பிரரேரணைகளிற்கான முற்பணங்களாக ரூபா 449,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பிரேரணைகளில் எதுவும், ஆராய்ச்சி அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால நீடிப்புக்கள் பல வழங்கப்பட்டிருந்தும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பின்னர் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து முற்பணங்களை அறவிடுவதற்கு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஆராய்ச்சிகளுக்காக கொடுக்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*3.1.3 முற்பணங்களின் வழங்கல் மற்றும் தீர்ப்பனவில் ஒழுங்கீனங்கள்:*

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:-

*(அ) பல்கலைக்கழகத்தின் பதவியினரால் முற்பணங்களாகப் பெறப்பட்ட ரூபா 132,000 ஆன தொகை 3-12 மாதங்கள் வீச்செல்லை கொண்ட கால தாமதத்தின் பின்னர் பயன்படுத்தப்படாது பணம் மீளளிக்கப்பட்டிருந்தது. இது பணத்தை தற்காலிகமாக தவறுதலாக கையாள்வதற்கு வழிவகுக்கலாம்.*

*(ஆ) மீளாய்வாண்டில் பதவியினரால் பெறப்பட்ட ரூபா 565,200 ஆன தொகை 2008, திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தீர்ப்பனவு செய்யப்படாமலிருந்தது.*

*3.2* ***செயற்பாட்டு மீளாய்வு :***

*3.2.1 செயலாற்றல் :*

*(அ) பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்கள்*

*மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பின்வரும் பீடங்களிற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன :*

| | | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பீடம் | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | மொத்தம் |
| (i) | கலை | 243 | 199 | 146 | 31 | 619 |
| (ii) | முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 52 | 54 | 59 | 75 | 240 |
| (iii) | பிரயோக விஞ்ஞானம் | 51 | 47 | 49 | - | 147 |
| (iv) | இஸ்லாமிய கற்கை மற்றும் அரபு மொழி | 78 | 43 | 10 | 02 | 133 |
| | **மொத்தம்** | **424** | **343** | **264** | **108** | **1139** |

*(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம் :*

*கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1,138 ஆக இருந்தது. ஏற்பட்ட மொத்த கிரயம் ரூபா 362,173,596 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 318,254 ஆக இருந்தது.*

(இ) பரீட்சைகள் :

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் மற்றும் விடுவிக்கப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன:-

| பீடம் | நடாத்தப் பட்ட பரீட்சை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களின்எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கலை மற்றும் கலாசாரம் | 2008 யூலை | 770 | 722 |
| முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 2008 யூலை | 358 | 291 |
| பிரயோக விஞ்ஞானம் | 2008 சனவரி | 284 | 151 |
| இஸ்லாமிய கற்கை மற்றும் அரபுமொழி | 2008 யூலை | 156 | 146 |
| மொத்தம் | | 1,568 | 1,310 |

3.2.2 பயனற்ற செலவினம்/கைவிடப்பட்ட செயற்றிட்டங்கள் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக வளவில் மண் பரீட்சிப்பு மற்றும் ஆராய்ச்சிக்காக ஐக்கிய ராச்சிய அடிப்படையிலான உசாத்துணைக் கம்பனிக்கு (ஏஆர்யூபீ) 2006 ஆம் ஆண்டில் ரூபா 16,866,550 மொத்தத் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தத் தொகை 2008 ஆம் ஆண்டுவரை தொடர்ந்தும் நடைபெறும் வேலைகள் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. எனினும் எவ்வித மண் பரிசோதனை அல்லது ஆராய்ச்சி அறிக்கைகள் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. இந்தச் செயற்திட்டம் பல்கலைக்கழகத்தால் அமுலாக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருந்தமையால் இந்தக் கொடுப்பனவு வீணான செலவினமாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) நூலக பாதுகாப்பு முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக 2007 ஆம் ஆண்டில் ரூபா 7,302,500 மொத்தத் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2005/2006 ஆம் ஆண்டில் நூலகத்திற்காக கோட்டு விதி முறைமையின் கொள்வனவில் ரூபா 1,192,980 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், மேற்படி முறைமைகள் 2008, திசெம்பர் 31 வரையிற்கூட பல்கலைக்கழகத்தால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.3 சிக்கமனற்ற கொடுக்கல் வாங்கல்கள் :

கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளிலிருந்து மீளாய்வாண்டில் செலவினத்தின் மீதான கட்டுப்பாடெதனையும் நடைமுறைப்படுத்தாது கூட்டங்கள் மற்றும் நலன்புரி ஒன்று கூடலில் பங்குபற்றியோருக்கான உணவுகள் மற்றும் சிற்றுண்டி வழங்குவதற்காக ரூபா 1,346,173 ஆன செலவினம் செய்யப்பட்டிருந்தது.

3.2.4 பயன்பாடற்ற சொத்துக்கள் :

ரூபா 391,688 பெறுமதியான ஏழு நுகர்வுப் பொருட்கள் குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது 4 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

3.2.5 மேலதிகக் கொடுப்பனவு :

கணனிகளுக்கான 50 கொன்டென்சர்கள் மற்றும் 27 ட்ரான்சிஸ்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 53,350 மொத்தத் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், வேலைபூர்த்தியாக்கல் அறிக்கைகளின்படி 40 கொண்டென்சர்களும் 20 ட்ரான்சிஸ்டர்களும் பொருத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 13,350 ஆன மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2.6 மோட்டார் வாகனங்களின் பயன்பாடு :

தாபனவிதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவு மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் என்பவற்றிற்கு முரணாக 2008, யூன் 01 தொடக்கம் 2008, திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக பல்கலைக்கழக பீடங்களின் பீடாதிபதிகளுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் வதிவிடங்கள் மற்றும் வேலைத் தளத்திற்குமிடையில் பிரயாணம் செய்வதற்காக ரூபா 3,21,337 ஆன எரிபொருள் படிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

3.2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள் :

மீளாய்வாண்டில் விடுதிச் சொத்துக்களுக்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் மற்றும் நட்டங்கள் உறுதிபடுத்தப்பட்டிருக்கவில்லை. இறுதி ஆண்டு மாணவர்களினால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் மற்றும் நட்டங்கள் ரூபா 8,810 ஆக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

*3.2.8 முறி உடன்படிக்கைகளின் மீறல்கள் :*

*கல்வி விடுமுறையில் வெளிநாடுகளிற்குச் சென்ற சில விரிவுரையாளர்கள் குறித்த திகதிகளில் திரும்பி வந்திருக்காததுடன் பல்கலைக்கழகத்தால் அந்த விரிவுரையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ரூபா 91,11,848 மொத்தத் தொகையான முறிகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.*

*3.2.9 சொத்துக்களின் மெய்மையாய்வு:*

*(அ) பல்கலைக்கழக சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு 1996 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*(ஆ) பல்கலைக்கழகத்தின் மொத்தப் பதிவேட்டுப் பொருள் விடயங்களை மெய்மையாய்வு செய்து உறுதிப்படுத்துவதற்காக ஒரு பிரதான பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.*

*3.2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு:*

*மீளாய்வாண்டின் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு திருப்திகரமாக இணங்கியிருக்கவில்லை.*

*3.2.11 உள்ளகக் கணக்காய்வு:*

*பல்கலைக்கழகத்தில் ஒரு உள்ளகக் கணக்காய்வுக் கூறு நிறுவப்பட்டிருக்கவில்லை.*

*3.2.12 பாதீட்டுக் கட்டுப்பாடு:*

*பாதீடிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கிடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் அது பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.*

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்:**

*கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.*

*(அ) நிலையான சொத்துக்கள்*
*(ஆ) பொருட்பதிவேட்டின் பேணுகை*
*(இ) கடன்பட்டோர்கள்*
*(ஈ) கணக்கீடு*

*எஸ். ஸ்வர்ணஜோதி,*
*கணக்காய்வாளர் தலைமையதிபதி.*

*எமது இல. : எப்ஏ/வீசீ/பீ/ஏஜீ/2008*

*கணக்காய்வாளர் நாயகம்,*
*கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,*
*கொழும்பு - 07*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 108(2) இற்கு அமைவாகவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைவாகவும், 2008, திசெம்பர் 30 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை***

*மேற்படி விடயம் சார்பாக என்ஈ/ஏஎம்/பீ/எஸ்ஈயுஎஸ்எல்/2008 என்ற இலக்கம் கொண்டதும் 2009, திசெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்டதுமான தங்களின் கடிதம் தொடர்பான எமது அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.*

***2.2 கணக்குகள் மீதான கருத்துரைகள்:***

*2.2.1 இலங்கை கணக்கீட்டுக் கூற்றுக்கள்:*

*(அ) நிதியுதவி அளிக்கப்பட்ட திட்டங்களானவை பல்கலைக்கழக வருடாந்த கணக்குகளில் உள்ளடக்கப்படுவதில்லை என்பதே பல்கலைக்கழக முறைமையில் காணப்படும் பொதுவான நடைமுறையாகும். எனினும், எதிர்காலத் தேவை கருதி* IRQUE *திட்ட*

கணக்குகளை பல்கலைக்கழக கணக்குகளில் நாம் உள்ளடக்கியுள்ளோம். அவ்வாறே CIDA கணக்குகளும் பல்கலைக்கழக கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படும்.

(அ) பெறுமானத் தேய்வு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை வழங்கப்பட்ட வருடாந்தக் கணக்குகளின் பந்தி 1.3.3 (ஆ) இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

*2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்:*

(அ) எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 13,26,602.00 தொகையான நேரடிப் பற்றுக்களும் ரூபா 3,26,211.00 பெறுமதியான நேரடி வரவுகளும் ஏற்கனவே கணக்கிணக்கம் செய்யப்பட்டு உரிய கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ) சம்மாந்துறை, பிரயோக விஞ்ஞான பீடத்தில் ரூபா 3,26,211 பெறுமானத்திற்கு சுற்றுவேலி அமைக்கப்பட்டதுடன் அது இன்னமும் அங்கு காணப்படுகின்றது.

(ஈ) இது சீர் செய்யப்படும்.

(உ) இது சீர் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(எ) எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஏ) இது சீர் செய்யப்பட்டுள்ளது.

(ஐ) திரு. செபஸ்தியாம்பிள்ளை அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆராய்ச்சி முற்பணம் மற்றும் ப்றீப்கேஸ் இன் கொள்விலை என்பவற்றுக்காக சேமலாப நிதியத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ரூபா 32,895 அறவிடப்படடு அனுப்பப்பட்டது. இது கணக்கிலக்கம் 11801 இல் வைப்புச் செய்யப்பட்டதோடு (பற்றுச்சீட்டு இலக்கம் 4535 ஆந் திகதி 2005.06.02) இது பேரேட்டு மீதிகளுக்கெதிராக சீர் செய்யப்படும்.

(ஒ) நூலகரினால் சுட்டிக்காட்டப்பட்ட தொகையானது இன்டன்ட் பெறுமதியைக் காட்டுகின்ற அதேவேளை நிதிக் கூற்றுக்கள் புத்தகங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளைத் தருகின்றது.

*2.2.3 பெறவேண்டிய, செலுத்த வேண்டி கணக்குகள் :*

(அ) பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன்களை இத்தொகை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைளின் பிரகாரம் அறவீடுகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) செலுத்தப்படாமல் காணப்படும் கடன் நிலுவைகளானவை பதவியை இராஜினாமா செய்த, பதவியை வெற்றிமாக்கிய அல்லது இறந்துபோன ஊழியர்களுக்கு உரியவையாகும். இந்நிலுவைத் தொகைகளை சம்பந்தப்பட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*2.2.4 கணக்காய்விற்கு சான்றின்மை:*

ரூபா 46,847,547 தொகையில் ரூபா 43,053,819 சென்மதியாளர் மற்றும் வருமதியாளர் தொடர்பானதாகும்.

வருடாந்த கணக்குகளை தயாரிப்பதற்கு முன்னர், வருமதியாளர்களும் செல்மதியாளர்களும் 2008.12.31 இல் உள்ளவாறான தமது நிலுவைகளை உறுதிப்படுத்தித் தருமாறு வேண்டப்பட்டனர். சிலர் மாத்திரமே இதற்கு பதிலளித்துள்ளனர்.

ரூபா 3,793,728 தொகையுடைய பின்வரும் செலவீடுகளுக்கான ஆவணங்கள் அது தொடர்பான வௌச்சர் படிவங்களோடு உள்ளதோடு கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டன:-

- விடுதிகளாக வாடகைக்கமர்த்தப்பட்ட வீடுகளுக்கு செலுத்தப்பட்ட வாடகை
- வருகை தரும் பல்கலைக்கழக மருத்துவ அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட கட்டணம்
- ஆய்வுச் சபை உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு முதலியன.

*2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களோடு இணங்காமை:*

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம்

(i) பிரிவு 109

2005 திசெம்பர் 31 வரையான கணக்காய்வாளர் அறிக்கைகளும் அவ் அறிக்கைகள் மீதான பல்கலைக்கழகத்தின் அவதானிப்புகளும் ஏற்கனவே அரசாங்க அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள்

(i) 2002 ஓகத்து 02 இன் 807 ஆம் இலக்கம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. எனவே, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை எம்மால் கூட்ட முடியவில்லை.

(ii) 1997 ஓகத்து 13 இன் 48 ஆம் இலக்கம்.

நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுகின்றது.

(இ) பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுவினதும் உயர்கல்வி நிறுவனங்களினதும் தாபனக் கோவை :

(i) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1 - கல்விசார் ஊழியர்களின் வரவுப் பதிவேடு கல்விசார் திணைக்களத் தலைவர்களினால் அத்திணைக்கள மட்டத்தில் பேணப்படுகின்றன.

(ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 9 - வாகனங்களுக்கான லொக் புத்தகங்கள் நிர்வாகப் பிரிவில் பேணப்படுகின்றன.

(ஈ) நிதிப் பிரமாணங்கள் இல. 110, 700(5) மற்றும் 702(3)

எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

F R 702 (3)

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் பிரதிகள் தற்போது கணக்காய்வாளருக்கு அனுப்பப்படுகின்றன.

நிதிப் பிரமாணம் 396 (d)

ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகள் தற்போது இரத்துச் செய்யப்படுகின்றன.

3.0 **நிதிசார் செயற்பாட்டு மீளாய்வு:**

3.1 ***நிதிசார் மீளாய்வு:***

3.1.2 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்/ஒழுங்கற்ற கொடுப்பனவுகள்:

ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக 13 ஆராய்ச்சி பிரேரணைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் ஏற்கனவே அறவீடு செய்யப்பட்டுவிட்டன.

3.1.3 முற்பணங்கள் வழங்குவதிலும் தீர்ப்பனவு செய்வதிலும் ஒழுங்கீனங்கள்:

(அ) எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இம் முற்பணங்கள்அனைத்தும் தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டுவிட்டன.

3.2.2 வீணான செலவீடு/கைவிடப்பட்ட செயற்றிட்டம்:

(அ) இலங்கைத் தென்கிழக்குப் பல்லைக்கழகத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆலோசகராக ARUP நிறுவனத்தினை ஈடுபடுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில் இச் செலவீட்டுக்காக திறைசேரி ரூபா 15 மில்லியனை ஒதுக்கியுள்ளது. ARUP நிறுவனத்திற்கு பிரதான திட்டத்தினை வரைவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மண் பரிசோதனை அல்லது ஆய்வு வேலைகளை அது மேற்கொள்ளவில்லை. ஆரம்ப பிரதான திட்டம் பல்கலைகழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. குவைத் நிதியிடலுக்கான கருதுகோள் அறிக்கை இப்பிரதான திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 6 ஓகத்து 2007 ஆந் திகதியிடப்பட்ட அதன் கடிதத்தின் மூலம் பல்கலைக்கழகம் இறுதி பிரதான திட்டத்தைப் பெறுவதன் பொருட்டு மீதிக் கொடுப்பனவை செலுத்துவதற்காக திறைசேரியின் அனுமதியைக் கோரியது.

(ஆ) பிரயோக விஞ்ஞான பீட நூலகத்தில் நூல்களுக்கான பார் கோடிங் இடுவதற்கான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதோடு பாவனைக்கு ஆயத்தமாக உள்ளது. ஒலுவில் பிரதான நூலகத்தில் நூலக பாதுகாப்பு முறைமையின் அமுலாக்கம் செயன்முறையில் உள்ளது. மென்பொருளை WINISIS இலிருந்து KOHA ஒருங்கிணைந்த நூலக தகவல் முறைமைக்கு மாற்றுவதன் காரணமாக இதன் பாவனை தாமதமாகியுள்ளது.

*3.2.3 சிக்கமனற்ற கொடுக்கல் வாங்கல்:*

உலக வங்கியினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்தில் ஊழியர்களும் மாணவர்களும் சமூக நல்லிணக்கத்தினை மேம்படுத்தவதற்கான நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டன. இவற்றில் மாணவர்கள் பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் நலன்விரும்பிகள் பங்குபெறும் நிகழ்ச்சிகளும், சிரமதானம், கலாசார விஜயங்கள், வேலைப்பட்டறைகள் போன்றவையும் உள்ளடங்குகின்றன.

*3.2.4 பாவனையற்ற சொத்துகள்:*

எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டதுடன் அவற்றை வெளியேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*3.2.5 மேலதிக கொடுப்பனவு:*

கணனி திருத்த வேலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து கொண்டன்ஸர்களும், டிரான்சிஸ்டர்களும் பயன்படுத்தப்பட்டுவிட்டன. இதில் எதுவித மேலதிகக் கொடுப்பனவுகளும் சம்பந்தப்படவில்லை.வேலை பூர்த்திச் சான்றிதழும் இதற்கு காணப்படுகின்றது.

*3.2.6 மோட்டார் வாகன பயன்பாடு:*

2008 சனவரி முதல் யூன் வரை குழு முறையிலான போக்குவரத்து வசதிகளே வழங்கப்பட்டன. போக்குவரத்து வசதிகளிலுள்ள கஷ்டங்களையும், பீடாதிபதிகளின் கோரிக்கைகளையும் கவனத்திற் கொண்டு, பல்கலைக்கழகப் பேரவை பீடங்களின் பீடாதிபதிகள் தமது வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு தமது சொந்த வாகனங்களைப் பாவிப்பதற்கான அனுமதியினை வழங்கியது. இந்நடைமுறை வேறு சில பல்கலைக்கழகங்களிலும் காணப்படுகின்றது.

*3.2.7 அடையாளம் காணப்பட்ட இழப்புக்கள் - விடுதி:*

மாணவர்களினால் சேதமிழைக்கப்படுவதன் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கான பெறுமதிகள் குறித்த அம்மாணவர்கள் சான்றிதழ் பெறும்போது அவர்களிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது.

*3.2.8 முறிகள் ஒப்பந்தங்கள் மீறல்:*

வெளிநாட்டு படிப்பு விடுமுறையின் பேரில் சென்றிருந்த பின்வரும் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்துக்கு மீண்டும் வந்து கடமையேற்கவில்லை:-

1. திரு. பீ. கோபால்ராஜ், விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. திரு. எம். எம். எம். மாஹிர் கணனி விஞ்ஞான போதனாசிரியர்
3. திரு. ஏ. ஆர். எம். இம்தியாஸ், விரிவுரையாளர்(தகுதிகாண்)
4. திரு. எம். எம். எம். றபீக், விரிவுரையாளர் (தகுதிகாண்)

திரு. பீ. கோபால்ராஜ் தனது ஒப்பந்த முறித்தொகையினை பூரணமாக பல்கலைக்கழகத்துக்கு செலுத்தி முடித்துவிட்டார். திரு. எம். எம். எம். மாஹிர் ஆரம்ப தொகையாக ரூபா 50,000 இனை செலுத்தியுள்ளதோடு, மீதித் தொகையினை தனது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்யுமாறு வேண்டியுள்ளார். திரு. ஏ. ஆர். எம். இம்தியாஸ் மற்றும் திரு. எம். எம். எம். றபீக் ஆகியோரிடமும் அதேபோன்று ஒப்பந்த முறித் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*3.2.9 சொத்துக்கள் சரிபார்த்தல்:*

(அ) பௌதிகரீதியாக சரிபார்த்தல் 2006 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 2010 ஆம் ஆண்டு முடிவுவரை இதனை மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) பிரதான இருப்புப் பதிவேடு நிர்வாகப் பிரிவில் காணப்படுகின்றது.

*3.2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு:*

இக்குழுவிற்குரிய ஏற்பாட்டாளராக ஒரு உள்ளகக் கணக்காய்வாளரை எமது பல்கலைக்கழகத்துக்கு நியமித்துத் தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை நாம் வேண்டியுள்ளோம். இவ்வருட நியமனங்களிலிருந்து ஒருவர் நியமிக்கப்படுவார் என எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

*3.2.11 உள்ளகக் கணக்காய்வு:*

ஒரு உள்ளகக் கணக்காய்வாளரை நியமித்துத் தருமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை நாம் வேண்டியுள்ளோம். இவ்வருட நியமனங்களிலிருந்து ஒருவர் நியமிக்கப்படுவார் என எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

*3.2.12 பாதீட்டுக் கட்டுப்பாடு:*

எதிர்காலப் பின்பற்றுகைக்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்:**

குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்:-

கலாநிதி எஸ். எம். முகம்மது இஸ்மாயில்,
உபவேந்தர்.

பிரதிகள் : 01. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
02. செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு
03. தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

**இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

*2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று*

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள்: | குறிப்பு | 2008 ரூபா | 2008 ரூபா | 2007 ரூபா | 2007 ரூபா |
|---|---|---|---|---|---|
| **நடைமுறையல்லா சொத்துக்கள்:** | | | | | |
| ஆதனம், பொறி உபகரணம் | 1 | 85,84,25,330 | | 77,94,23,872 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 2 | 88,83,632 | | 79,46,200 | |
| | | 86,73,08,962 | 86,73,08,962 | 78,73,70,072 | 78,73,70,072 |
| நடைபெறும் வேலைகள் | 3 | | 12,22,32,481 | | 8,08,63,364 |
| | | | 98,95,41,442 | | 86,82,33,435 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| கையிருப்புகள் | 4 | 64,07,015 | | 45,30,459 | |
| வர்த்தகமும் ஏனைய பெறவேண்டியவைகளும் | 5 | 5,76,88,594 | | 6,74,75,695 | |
| காசும் அதற்கு சமமானதும் | 6 | 44,65,893 | 6,85,61,503 | 82,75,704 | 8,02,81,858 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 1,05,81,02,946 | | 94,85,15,293 |
| **பொறுப்புக்கள்:** | | | | | |
| நடைமுறைப்பொறுப்புக்கள் | | | | | |
| செலுத்த வேண்டிவை | 7 | 4,30,53,818 | | 4,07,99,568 | |
| அட்டுறு செலவுகள் | - | - | | | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 8 | 37,08,241 | 4,67,62,059 | 76,92,350 | 4,84,91,928 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்:** | | | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | 9 | 3,22,87,289 | | 2,88,49,787 | |
| பெறுமானத் தேய்வொதுக்கம் | | 38,71,71,946 | 41,94,59,234 | 29,16,95,206 | 32,05,44,993 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 46,62,21,293 | | 36,90,36,921 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் | | | 59,18,81,652 | | 57,94,78,372 |
| தேறிய சொத்துக்கள் /பொறுப்பு | | | | | |
| திரண்ட நிதி | 10 | | 98,21,43,430 | | 86,78,22,998 |
| ஒதுக்கங்கள் | | | (39,02,61,778) | | (28,83,44,626) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/பொறுப்பு** | | **59,18,81,652** | | | **57,94,78,372** |

## இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி நிலைக் கூற்று*

| செயற்பாட்டு வருமானம் | குறிப்பு | 2008 | 2007 |
|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | | 21,55,00,000 | 20,92,39,000 |
| ஏனைய மானியங்கள் | 11 | 4,40,50,741 | 4,56,03,094 |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | **25,95,50,741** | **25,48,42,094** |
| ஆளணி ஊதியங்கள் | | 15,00,65,791 | 14,94,22,608 |
| பிரயாணம் | | 25,81,582 | 25,93,276 |
| வழங்கல்கள் | | 1,54,82,497 | 1,16,28,320 |
| பராமரிப்பு | | 1,01,53,465 | 84,83,717 |
| ஒப்பந்த சேவைகள் | | 4,34,13,844 | 3,10,67,794 |
| ஆய்வும் வெளியீடும் | | 2,71,87,699 | 3,11,06,037 |
| பெறுமானத் தேய்வு | | 9,54,76,740 | 4,30,03,689 |
| IRQUE | | 1,78,11,978 | 2,20,37,426 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | **36,21,73,596** | **29,93,42,862** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/(பற்றாக்குறை) | | **(10,26,22,855)** | **(4,45,00,768)** |
| நிதிக் கிரயம் | | - | - |
| ஆதன பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம் | | - | - |
| மொத்த செயற்பாடற்ற வருமானம் (செலவுகள்) | | - | - |
| அசாதாரண நடவடிக்கைகளுக்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | (10,26,22,855) | (4,45,00,768) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | | 7,05,703 | 1,38,26,068 |
| ***காலப்பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)*** | | **(10,19,17,152)** | **(3,06,74,700)** |

## இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று*

| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | 2008 ரூபா | 2007 ரூபா |
|---|---|---|
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிகை (பற்றாக்குறை) | (10,19,17,152) | (3,06,74,700) |
| ***காசு அல்லாத நகர்வுகள்:*** | | |
| பெறுமானத் தேய்வு | 9,54,76,740 | 3,80,38,758 |
| ஏனையவை | - | - |
| பணிக்கொடை கொடுப்பனவில் அதிகரிப்பு | 34,37,502 | 2,37,644 |
| | (30,02,911) | 75,93,702 |
| ஊழியர் செலவு தொடர்பான ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு | - | - |
| நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு /குறைவு | 18,76,556 | 8,84,584 |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு /குறைவு | (97,87,100.60) | 2,02,25,585 |
| நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு /குறைவு | (17,29,869) | 2,07,42,589 |
| | 61,80,675 | (3,67,580) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | 31,77,765 | 72,21,122 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| உபகரணங்கள், பொறிகள் கொள்வனவு | 12,13,08,006 | 11,98,69,931 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (11,81,30,242) | (11,26,43,809) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | |
| மூலதன மானியம் | 11,43,20,432 | 11,21,03,955 |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள் | (38,09,809) | (5,39,854) |
| கால ஆரம்பத்தில் இருந்த காசும் அதற்கு சமமானதும் | 82,75,704 | 88,15,558 |
| கால முடிவில் உள்ள காசும் அதற்கு சமமானதும் | 44,65,893 | 82,75,704 |

*12-1040/3*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 469527 - வர்ரடண பத்மானந்த டி சில்வா நந்தா ஸ்டோர்ஸ் தனி உரிமையாளர்

30.03.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த வர்ரடண பத்மானந்த டி சில்வா நந்தா ஸ்டோர்ஸ் என்ற பெயரில் தனிஉரிமையாளராக வியாபாரம் செய்பவரும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு அயி. என். விஜேசேகரவின் 23.08.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2968 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 12.10.2009 ஆந் திகதி வரை ரூபா 15,82,084.19 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி படி மேற்படி முறி இலக்கம் 2968 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 15,82,084.19 வுடன் 13.10.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 12,78,300 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொடபத்துவ வத்துகெதர பரகாதொட்ட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். பீர்த்தி வீரவர்தன 14.11.1996 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 437 இல் காண்பிக்கப்பட்ட அம்பகாவத்த காணியின் எல்லைகள் - வடக்கு : இக்காணியின் மிகுதி பங்கு ; கிழக்கு : இக்காணியின் மிகுதி பகுதி ; தெற்கு : எச். என். அயிரனிஸ் வசித்த காணி ; மேற்கு : அம்பலன்கொட எல்பிட்டிய பிரதான ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 2.3பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 437. இக்காணி பலப்பிட்டிய காணிப் பதிவகத்தில் A 185/256 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி பரகாதொட்ட கிராமத்தில் அமைந்துள்ள அம்பகாவத்த காணியின் நிலஅளவையாளர் எஸ். பீர்த்தி வீரவர்தன 14.11.1996 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 437 இல் காண்பிக்கப்பட்ட அம்பகாவத்த காணியின் பகுதிபடுத்திய லொட் 1 காணியின் எல்லைகள் - வடக்கு : இக்காணியின் மிகுதி பகுதி ; கிழக்கு : இக்காணியின் மிகுதி பகுதி ; தெற்கு : எச். என். அயிரனிஸ் வசித்த காணி ; மேற்கு : அம்பலன்கொட எல்பிட்டிய பிரதான ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 2.3பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 437இன்படி.

மேற்கூறிய காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடம் மூலம் பின்வருமாறு சொல்லப்பட்டதாவது:-

மேற்படி பரகாதொட்டவில் அமைந்துள்ள கட்டிடம் இலக்கம் 289 உள்ள நிலஅளவையாளர் எஸ். பீர்த்தி வீரவர்தன 10.06.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2614 இல் காண்பிக்கப்பட்ட அம்பகாவத்த காணியின் லொட் 1 எல்லைகள் - வடக்கு : இக்காணியின் மிகுதி பகுதி ; கிழக்கு : இக்காணியின் மிகுதி பகுதி ; தெற்கு : என். எச். அயிரனிஸ் வசித்த காணி ; மேற்கு : அம்பலன்கொட எல்பிட்டிய பிரதான ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 2.3பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 2614 இன்படி.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

12-1089

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 290159 - விக்ரம ஆராச்சிகே ஆனந்த குணசேகர, விக்ரம ஆராச்சிகே சமின்த குணசேகர

30.07.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த விக்ரம ஆராச்சிகே ஆனந்த குணசேகர, விக்ரம ஆராச்சிகே சமின்த குணசேகர என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக குளியாபிட்டிய பிரசித்த நொத்தாரிசு எச். என். பி. பெரேரா 30.03.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 8370 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்குசெலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் 21.05.2010 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ரூபா 50,52,123.78 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடுதல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி படி மேற்படி முறி இலக்கம் 8370 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 50,52,123.78 வுடன் 22.05.2010 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 42,31,246.12

ரூபாவுக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடு வதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டது.''

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல அத்பத்து மெத கோரளை மேற்கு உடுகம கிராமத்தில் அமைந்துள்ள மக்குலுகாமுல்ல வத்த மற்றும் மீகாமுலவத்த காணியின் நிலஅளவையாளர் ஏ. அத்தபத்து 05.06.1988 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1988/41 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 காணியின் எல்லைகள் - வடக்கு : எச். எம். பொடி அப்புஹாமியின் வரைபடம் இலக்கம் 1260 இல் காண்பிக்கப்பட்ட லொட் :A என்ற காணியின் பகுதிபடுத்தும் கம்பி வேலி; கிழக்கு : வரைபடம் இலக்கம் 1988/41 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 ; தெற்கு : வரைபடம் இலக்கம் 1988/ 41 இல் காண்பிக்கப்பட்ட லொட் 5 ; மேற்கு : பிரதான ரோட். இக்காணியின் விஸ்தீரணம் (1ஏ. 2றூ. 0பே.) இக்காணி குளியாபிட்டிய காணிப் பதிவகத்தில் L 226/161 இல் பதிவு செய்யப்பட்டது.

வரைபடம் இலக்கம் 1988/41 காண்பிக்கப்பட்ட லொட் 5 பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

12-1087

---

#### செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0100-00007321-001 (கேகாலை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2009.12.24 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''கண்டியைச் சேர்ந்த அத்தநாயக்க அந்தனி றொஹான் கிரிசாந்தஸ் பர்னாந்து மற்றும் பல்லகே இந்திராணி பெரேரா ஜயதிலக 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஜி. ஜ. கம்லத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, திசெம்பர் 12 ஆந் தேதிய 634 ஆம் இலக்க மற்றும் 2005, நவெம்பர் 21 ஆந் திகதிய 1117 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, ஓகத்து 11 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது எட்டு இலட்சத்து எழுபத்துமூவாயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 8,73,518.02) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 8,73,518.02 பணத்தொகையையும் 2009, ஓகத்து 12 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 634 மற்றும் 1117 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனங்களும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது''

#### அட்டவணை

மேல் மாகாணம், கண்டி மாவட்டத்தில் யட்டிநுவரையில் கங்கவட்ட கோறளேயில் அகஸ்ரா வத்தையில் அமைந்துள்ள அகஸ்ரா வத்தையின் பங்காயுள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். எஸ். பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 1979.01.23 ஆந்திகதிய 591 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 50 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரயைறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழவதும், சொல்லப்பட்ட துண்டு 50 இன் எல்லைகள் - வடக்கு : வீதி மற்றும் வீதிக்கான ஒதுக்கம் ; கிழக்கு : கிராமத்தவர்களின் காணி; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 51 ; மேற்கு : துண்டு 49 மற்றும் வீதிக்கான ஒதுக்கம். சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணம் கொண்ட இது கண்டி காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 177/132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்

12-1105

---

#### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவின்கீழ் (397 ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்

2010.10.14 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

''1. பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2003.10.30 ஆந் திகதிய இலக்கம்3041 கொண்ட ஈட்டுமுறியின் பேரில் இலக்கம் 160/1, அநகாரிக்க தர்மபால மாவத்தை, கண்டி என்னும் முகவரியச் சேர்ந்த திரு. அதிகாரம் வலவ்வே சரத் பண்டாரநாயக்க என்பவரினால் முதலும்

(நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட முப்பத்தெட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பத்தொரு சதம் (ரூபா 38,649.41 நீங்கலாக) 28.07.2010 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக ஒன்பது இலட்சத்து எழுபத்தாறாயிரத்து பதினேழு ரூபா தொண்ணூறு சதமும் (ரூபா 9,76,017.90) அத்துடன் அனுமதிக்கப்பட்ட எல்லையான ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 7,50,000) ரூபாவிற்கு (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட முப்பத்தெட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பத்தொரு சதம் (ரூபா 38,649.41 நீங்கலாக) 29.07.2010 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதினைந்து (15%) வீதத்திலான வட்டியும், இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2003.10.30 ஆந் திகதிய இலக்கம் 3041 கொண்ட முறியின் பேரில் வருமதியாகவுள்ள ஒன்பது இலட்சத்து எழுபத்தாறாயிரத்து பதினேழு ரூபா தொண்ணூறு சதமும் (ரூபா 9,76,017.90) (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட முப்பத்தெட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பத்தொரு சதம் (ரூபா 38,649.41 நீங்கலாக) அத்துடன் 29.07.2010 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் - சமரவ்கிரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கிணங்க இத்தால் அனுமதியும அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், கொஹொக்க கோரளை, (எனினும்உடஹேவாஹெற்ற கோரளை, கொஹொக்க பத்து என பதிவு செய்யப்பட்டுள்ளது) ஹங்குரான்கெத்த பிரதேச சபை எல்லைகளக்குள், றிக்கிகல்லகஸ்கட கிராமத்தில் ஹேவாஹெற்ற வீதியை நோக்கி அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஈ. பர்னாந்து அவர்களால் தயாரிக்கப்பட்ட 1998.03.01 ஆந் திகதிய 926 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் காட்டப்பட்டுள்ள ''கஹட்ட தெனிய'' என்றழைக்கப்படும், மேற்குறிப்பிட்ட 926 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க, வடக்கில் : கண்டி- ஹேவாஹெற்ற பெருந்தெருவும், அதே காணியின் மிகுதித் துண்டும் ; கிழக்கில் : அதே காணியின் மிகுதித் துண்டும் றாகல- கண்டி பெருந்தெருவும் ; தெற்கில் : றாகல-கண்டி பெருந்தெருவும் முதலாம் துண்டும் ; மேற்கில் : துண்டு 1 உம் ஹேவாஹெற்ற - கண்டி பெருந்தெருவும் எல்லைகளாகக் கொண்ட ஒன்பது தசம் எட்டு எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9.88பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள முழுக் காணியும் அதற்குள் அமைந்துள்ள வரிமதிப்பிலக்கம் 39, 41, 43 கொண்ட கட்டடங்களும் மற்றும் அனைத்துமாகும். இது நுவரெலியாக காணிப் பதிவகத்தில் R 281/189 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்படடுள்ளது.

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

எஸ். டபிள்யூ. ஜயசுந்தர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
2 ஆம் நகரக் கிளை,
கண்டி.

12-1108

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவின்கீழ் (397 ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்

2010.11.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது-

''பிரசித்த நொத்தாரிசு ஜீ. சீ. பி. திலகரத்ன அத்தாட்சிப் படுத்திய 2007.09.03 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3215, 2007.10.11 ஆந் திகதியிட்ட 3237 மற்றும் 2008.01.31 ஆந் திகதியிட்ட 3283 ஆகியவற்றின் பேரில் இல. 19, சங்கபோ மாவத்தை, பொருபன ரோட், இரத்மலானை என்னும் முகவரியைச் சேர்ந்த ரண்மார்ட் பகேஜிங் (பிறை) லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் திரு. மஹமரக்கலகே சுகித் சந்திரா தி சில்வா, திரு. மஹமரக்கலகே ஹேஷான் ஹிரந்த தி சில்வா மற்றும் திருமதி கொடல்லகே சமித்தி சுபாஷினி தி சில்வா ஆகியோரிடமிருந்து இரண்டு கடன்கள் மீது முதலும் 2010.10.07 வரை வட்டியும் ஏனைய கட்டணங்களும் ஒரு கோடி எண்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நாநூற்று முப்பத்தொரு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 10,82,87,431.61) மற்றும் ஒரு கோடி நான்காயிரத்து நூற்று அறுபது ரூபா எழுபத்து நான்கு சதம் (ரூ. 1,00,04,160.74) அத்துடன் இரண்டு கடன்கள் மீது ஏழு கோடி அறுபது இலட்சம் ரூபா (ரூ. 7,60,00,000) மற்றும் எழுபது இலட்சம் ரூபா (ரூ. 70,00,000) ரூபாய் மீது முறையே ஆண்டுக்கு பன்னிரண்டு (12%) வீதத்தில் 2010.10.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

மேற்குறிப்பிட்ட முறி இல. 3215, 3237, 3283 ஆகியவற்றின் மீது முறையே இரண்டு கடன்கள் மீது ஒரு கோடி எண்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நாநூற்று முப்பத்தொரு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 10,82,87,431.61) மற்றும் ஒரு கோடி நான்காயிரத்து நூற்று அறுபது ரூபா எழுபத்து நான்கு சதம் (ரூ. 1,00,04,160.74) அத்துடன் 2010.10.08 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 5, என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்கிரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### காணித்துசொத்தின் விவரணம்

மேல் மாகாணம், களுத்துறை மாவடடம், பாணந்துறை தொட்டமுனை வத்து வஸ்கடு தெபத்தயில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் மெலேகமயில் அமைந்த ''பானியவெல கும்புர'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். த சில்வா தயாரித்த 1991, மே 23 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 8736 இல் விபரித்த துண்டு A1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : பட்டாசாரி துலியானா பெர்ணாண்டோவினதும் தற்சமயம் எச். பீ. மாரசிங்ஹாவுக்குச்

சொந்தமானதுமான தூவ, பினோவிட்ட இறப்பர், பயிர்ச்செய்கையும், முன்னர் அடோ வெதாவும் பூத குராவும் உரிமைகோரிய தற்சமயம் டபிள்யூ. எம். எப். விஜேசுந்தரவுக்குச் சொந்தமான மேட்டு நிலமும்; கிழக்கில் : முன்னர் அடோ வெதாவும் பூத குராவும் உரிமை கோரிய தற்சமயம் டபிள்யூ. எம். எப். விஜேசுந்தர உரிமைகோரும் உயர் நிலமும் வரைபடம் இல. 8677 இல் துண்டு B உம் ; தெற்கில் : வரைபடம் இல. 8677 இல் துண்டு B மற்றும் C உம் வரைபடம் இல. 8677 இல் துண்டு A2 உம் ; மேற்கில் : முன்னர் அல்விஸ் உரிமை கோரியதும் தற்சதயம் டபிள்யூ. பீ. பெர்ணாண்டோ உரிமைகோரும் ஆதனமும் வேகந்தயும் பட்டாசாரி துலியானா பெர்ணாண்டோ தூவயும் எச். பி. மாரசிங்ஹ உரிமைகோரும் பினோவிட்ட உரிமைகோரும் ரப்பர் பயிர்ச்செய்கையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8736 இன்படி மூன்று ஏக்கர் இரண்டு றூட் முப்பத்து நான்கு பேர்ச்சஸ்கள் (3ஏ. 2றூ. 34பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் G 191/212 இல் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். ஆர். ஜயசேகர தயாரித்த 1999, ஒற்றோபர் 19 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1521 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு மெலேகமயில் அமைந்த ''பந்தியாவெல கும்புர'' என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 1521 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : பட்டாசாரி துலியானா பெர்ணாண்டோவுக்கு சொந்தமான காணி, தூவ மற்றும் எச். பீ. மாரசிங்ஹ உரிமைகோரும் பினோவிட்ட இறப்பர் காணியும் டபிள்யூ. எம். எப். விஜேசுந்தரவுக்குச் சொந்தமான மேட்டு நிலமும்; கிழக்கில் : டபிள்யூ. எம். எப். விஜேசுந்தரவுக்குச் சொந்தமான மேட்டு நிலமும் வரைபடம் இல. 8677 இல் துண்டு B உம் (வரைபடம் இல. 1520 இல் துண்டு 1) ; தெற்கில் : வரைபடம் இல. 8677 இல் துண்டு B உம் (வரைபடம் இல.1520 இல் துண்டு 1) வரைபடம் இல. 8736 இல் துண்டு C மற்றும் துண்டு A உம் ; மேற்கில் : வேகந்தயும் டபிள்யூ. பீ. பெர்ணாண்டோவின் ஆதனமும் பட்டாசாரி துலியானா பெர்ணாண்டோவுக்கு சொந்தமான காணியும் தூவயும் எச். பி. மாரசிங்ஹவின் பினோவிட்ட இறப்பர் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1521 இன்படி மூன்று ஏக்கர் இரண்டு றூட் முப்பத்து நான்கு பேர்ச்சஸ்கள் (3ஏ. 2றூ. 34பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

அத்துடன் பின்வரும் பாதை மீதான வழி உரிமையும் ஆகும்:-

மேற்குறிப்பிட்டவாறு மெலேகமயில் அமைந்த ''பந்தியாவெல கும்புர'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். த சில்வா தயாரித்த 1991 மார்ச் 4 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 8677 இல் விபரித்த துண்டு C என அடையாளமிட்ட (பாதை ஒதுக்கம்) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு C - வடக்கில் : அதே காணியின் துண்டுகள் A மற்றும் B உம் ; கிழக்கில் : அதே காணியின் துண்டு D உம் ; தெற்கில் : அதே காணியின் துண்டு A உம் ; மேற்கில் : அதே காணியின் துண்டு A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8677 இன்படி பதின்நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14பே.) விஸ்தீரண முடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் G 160/275 இல் பதிவு செய்யப்பட்டது.

மற்றும்

மேற்குறிப்பிட்டவாறு மெலேகமயில் அமைந்த ''பந்தியாவெல கும்புர'' என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8677 இல் விபரித்த துண்டு D (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : அதே காணியின் துண்டு B உம் ; கிழக்கில் : அடோ வெதாவும் பூத குராவும் உரிமைகோரிய டபிள்யூ. எம். எப். விஜேசுந்தரவுக்கு சொந்தமான மேட்டு நிலமும் ; தெற்கில் : 20 அடி அகல பாதைக்கு ஒதுக்கப்பட்டதும்; மேற்கில் : அதே காணியின் துண்டு A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8677 இன்படி ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 5பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் G 160/280 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

டி. எச். என். ஞானசிறி,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மொறட்டுவை.
2010, திசெம்பர் 02.

12-1106

---

**இலங்கை வங்கி**

